Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, APRIL 22 2025

செவ்வாய்க்கிழமை 22, ஏப்ரல் 2025 | ஒளி: 10 கதிர் 203 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE



## “ஓர் அழியாத முத்திரை”

புனித பாப்பரசர் பிரான்சிஸின் மறைவுக்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் கணக்கில் தனது இரங்கலைத் தெரிவித்தார்.

பாப்பரசரின் மறைவுக்கு இலங்கை மக்கள் சார்பாகத் தனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அமைதி, இரக்கம் மற்றும் மனிதநேயம் ஆகியவற்றிற்கான தனது அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன் போப் உலகில் ஓர் அழியாத முத்திரையைப் பதித்துள்ளார் என்று ஜனாதிபதியின் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



## 15 நாட்களில் புதிய போப்

பொதுவாக போப் ஆண்டவர் ஒருவர் இறந்தாலோ, புதிய போப் ஆண்டவர் நியமிக்கப்பட இருந்தாலோ ரகசிய தேர்தல் செயல்முறை நடத்தப்படும் என கூறப்படுகிறது.

அதாவது போப் ஆண்டவர் பதவி காலியானது முதல் 15-20 நாட்களுக்குள், 80 வயதுக்குட்பட்ட கார்டினல்கள் உலகம் முழுவதிலுமிருந்து வந்து, வாரிசைத் தீர்மானிப்பதற்கான ரகசியத் தேர்தல் செயல்முறையான போப்பாண்டவர் மாநாட்டில் பங்கேற்பார்கள்.

தொடர்ச்சி P2



## ஜூபிலி ஆண்டில் போப் மரணம்

கத்தோலிக்கர்களுக்கான மிக முக்கியமான நாட்காட்டி நிகழ்வைத் தொடர்ந்து வரும் போப்பாண்டவரின் மரணம் மட்டுமல்லாமல், ஒவ்வொரு 25 வருடங்களுக்கும் ஒரு முறை வரும் சிறப்பு ஜூபிலி ஆண்டில் வருகிறது.

டிசெம்பர் 24 ஆம் திகதி செயிண்ட் பீட்டர்ஸ் பசிலிக்காவில் வழக்கமாக செங்கல் சூழப்பட்ட புனிதக் கதவை போப் திறந்தபோது ஜூபிலி தொடங்கியது, மேலும் மில்லியன் கணக்கான யாத்திரீகர்கள் வாசல் வழியாகச் சென்று தங்கள் பாவங்களுக்கு மன்னிப்பு கேட்க வத்திக்கானுக்கு வருகிறார்கள்.

இந்த சிறப்பு ஆண்டில் பல்லாயிரக்கணக்கான கத்தோலிக்கர்கள் ஈஸ்டர் திருப்பலுக்காகக் கூடியிருந்தனர்.

வத்திக்கானில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் கார்டினல் ஏஞ்சலோ கோமாஸ்ட்ரி தலைமையில் 2025 ஏப்ரல் 20, ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஈஸ்டர் திருப்பலியின் முடிவில், செயின்ட் பீட்டர்ஸ் பசிலிக்காவின் மையப் பகுதியில் போப் பிரான்சிஸ் தோன்றி, ஆசீர்வாதத்தை வழங்கினார்.

தொடர்ச்சி P2



வத்திக்கானில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் கார்டினல் ஏஞ்சலோ கோமாஸ்ட்ரி தலைமையில் 2025 ஏப்ரல் 20, ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்ற ஈஸ்டர் திருப்பலியின் முடிவில், செயின்ட் பீட்டர்ஸ் பசிலிக்காவின் மையப் பகுதியில் போப் பிரான்சிஸ் தோன்றி, ஆசீர்வாதத்தை வழங்குகிறார்...

### திருத்தந்தை போப் பிரான்சிஸ்

# நித்திய இளைப்பாறினார்

கத்தோலிக்க திருச்சபை தலைமை மதகுரு போப் பிரான்சிஸ், அந்நாட்டின் நேரப்படி, திங்கட்கிழமை(21) காலை 7.35 மணிக்கு நித்திய இளைப்பாறினார். அவர், நித்திய இளைப்பாற்று அடையும் போது அவருக்கு வயது 88 ஆகும்.

ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமை(20) வத்திக்கானின் செயிண்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் தோன்றிய 24 மணி நேரத்திற்குள் போப்பின் மரணம் நிகழ்ந்துள்ளது.

அவர் சக்கர கதிரையில் வெளியே வந்தபோது, அங்கு குழுமியிருந்தவர்கள் ஆரவாரம் செய்தனர். அந்த கூட்டத்தை நோக்கி செயிண்ட் பீட்டர்ஸ் பசிலிக்காவின் பால்கனியில் இருந்து கையசைத்து, “அன்புள்ள சகோதர சகோதரிகளே, ஈஸ்டர் வாழ்த்துக்கள்” என்று கூறினார்.

உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த போப் பிரான்சிஸ் மறைவு செய்தி அறிந்து உலகம் முழுவதும் உள்ள கத்தோலிக்க கிறிஸ்துவ மக்கள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

நிமோனியா பாதிப்பால் மருத்துவமனையில் 5 வாரங்களுக்கு மேல் சிகிச்சை பெற்று கடந்த மாதம் வீடு திரும்பிய கத்தோலிக்க திருச்சபை தலைமை மதகுரு போப் பிரான்சிஸ், ஈஸ்டர் திருநாளையொட்டி செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் மக்களைச் சந்தித்து ஆசி வழங்கியிருந்தார்.

இந்நிலையில், வத்திக்கானில் உள்ள தனது இல்லத்தில், திங்கட்கிழமை(21) காலமானதாக வத்திக்கான் அறிவித்துள்ளது.

தென் அமெரிக்காவில் இருந்து கத்தோலிக்க திருச்சபையின் தலைமை மதகுருவாகத் தேர்வு செய்யப்பட்ட முதல் திருத்தந்தை போப் பிரான்சிஸ் என்பது குறிப்பிடத்தக்கது

ஜார்ஜ் பெர்கோகிலோ என்ற இயற்பெயர் கொண்ட போப் பிரான்சிஸ், அப்பதவியில் அமர்ந்த முதல் லத்தீன் அமெரிக்கர் என்ற பெருமையைக் கொண்டவர். 2013ஆம் ஆண்டும் மார்ச் 13ஆம் திகதி 266ஆவது போப்பாக அவர் தெரிவு செய்யப்பட்டார்.

உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவ மக்கள் போப் உடல்நலம் பெற்று மீண்டு வரப் பிரார்த்தனை செய்துவந்த நிலையில் அவரது மறைவுச் செய்தி வந்துள்ளது.

## “ஜனாதிபதியின் உரை தேர்தலுக்கு நல்லதல்ல”



தேசிய மக்கள் சக்தியால் நிறுவப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு நிதி வழங்கப்படும் என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, இரண்டு தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தெரிவித்த கருத்து அரசியல் ரீதியாக சில முன்னேற்றங்களுக்கு வழிவகுக்கும் என்பதால், இதுபோன்ற கருத்துக்களை வெளியிடுவதைத் தவிர்க்குமாறு ஜனாதிபதிக்கு அறிவுறுத்துமாறு ஜனாதிபதியின் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “வீட்டை கேட்டு கடிதம் வந்தால் ஒப்படைப்பேன்”



தனது வீட்டை ஒப்படைக்குமாறு கோரி இதுவரை தனக்கு கடிதம் வரவில்லை என்றும், கிடைத்தால் அதை ஒப்படைப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதற்கிடையில், அமெரிக்க சிஐஏ வெளியிட்ட அறிக்கை, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னால் ஐஎஸ்ஐஎஸ் தான் மூளையாக செயல்பட்டது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2


## 21/4 சூத்திரதாரி யார்?



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி யார்? என்பது தொடர்பிலான தகவல்களை இன்றைய தினம் விசேட அறிவிப்பின் மூலம் வெளிக்கொணர்வதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அந்த சூத்திரதாரி யார்? என கேள்வியெழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இந்தக் கதையும் வெறும் பொய்யான கதைதானா? என்றும் வினவினார்.

தொடர்ச்சி P2

## “ஈஸ்டர் தாக்குதலில் அரசு அரசியல் செய்கிறது”



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்பாக, ஈஸ்டர் தின தாக்குதலை வைத்து அரசாங்கம் அரசியல் செய்வதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச குற்றம்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது, நீதியரசர் ஜனக் டி சில்வா தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணையத்தின் இறுதி அறிக்கை, அப்போதைய ஜனாதிபதியின் உத்தரவுகளின்படி, 2021 பெப்ரவரி 23 அன்று முறையாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



## “கரிசனைகளுக்கு செவிசாய்க் தயார்”

அனைத்து பிரஜைகளும் அமைதியுடனும் நல்லிணக்கத்துடனும் வாழும் ஒரு நாட்டை அடுத்த தலைமுறைக்கு வழங்க வேண்டியது அவசியம் என்றும், பொதுமக்களின் விவகாரங்கள் குறித்து அரசாங்கம் அக்கறையுடன் உள்ளது என்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

வன்னி தேர்தல் மாவட்டத்தில் உள்ள செட்டிகுளம் மனிக் பாம் சனசமூக அபிவிருத்தி நிலையம் மற்றும் உக்குளங்குளம் விளையாட்டு மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (20) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

“எமது வரலாற்றில் அதிக எண்ணிக்கையிலான பெண் உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்றம் இதுதான். முன்பு, 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 5% க்கும் குறைவான பெண்களே பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டனர். ஆனால் இந்த நாட்டின் சனத்தொகையில் 52% ஆனவர்கள் பெண்களாகும்.”

தொடர்ச்சி P2

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

## “சுயாதீன வழக்கு விசாரணை அலுவலகம் தேவை”

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்களை பொறுப்புக்கூற வைப்பதற்காக, சுயாதீன வழக்கு விசாரணை அலுவலகம் நிறுவ வேண்டும் என பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பு- கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் திங்கட்கிழமை (21) இடம்பெற்ற ஆராதனை நிகழ்வில் போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# 15 நாட்களில் புதிய போப்

70க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 220க்கும் மேற்பட்ட கார்டினல்கள் உள்ளனர், ஆனால், சுமார் 120 பேர் மட்டுமே கார்டினல் வாக்காளர்கள்.

வத்திக்கானில் நடைபெறும் தேர்தலின்போது, ஒரு வேட்பாளர் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறும் வரை பல சுற்றுகளில் வாக்களிப்பார்கள். போப் ஒருவரைத் தேர்ந்தெடுக்காத ஒவ்வொரு சுற்று வாக்களிப்புக்கும், தேவாலயத்திலிருந்து கருப்பு புகை வெளியேறும். ஒரு கட்டத்தில் வெள்ளை புகை வெளியேறும் பட்சத்தில் புதிய போப்பின் தேர்வைக் குறிக்கும்.



# ஜூபிலி ஆண்டில் போப் மரணம்

அவரது பாரம்பரிய ஈஸ்டர் உரை மற்றும் ஆசீர்வாதத்தை ஒரு உதவியாளர் வாசித்தார்.

ஆசீர்வாதத்தைத் தொடர்ந்து, அவர் சதுக்கத்தைச் சுற்றி அழைத்துச் செல்லப்பட்டார். கூட்டத்தின் வழியாக அவர் கடந்து செல்லும்போது, அவரது ஊர்வலம் பல முறை நின்றது, ஏனெனில் அவர் ஆசீர்வதிப்பதற்காக குழந்தைகள் கொண்டு வரப்பட்டனர்.

ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமை வத்திக்கானின் செயிண்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் தோன்றிய 24 மணி நேரத்திற்குள் போப்பின் மரணம் நிகழ்ந்துள்ளது.

அவர் சக்கர நாற்காலியில் வெளியே வந்தபோது, ஆரவாரம் செய்த கூட்டத்தை நோக்கி செயிண்ட் பீட்டர்ஸ் பசிலிக்காவின் பால்கனியில் இருந்து கையசைத்து, "அன்புள்ள சகோதர சகோதரிகளே, ஈஸ்டர் வாழ்த்துக்கள்" என்று கூறினார்.

# 21/4 சூத்திரதாரி யார்?

ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்புடைய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையை மாத்திரம் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் சாக்குப்போக்குகளைக் கூறிய இந்த அரசாங்கம், இன்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் சாக்குப்போக்குகளைக் கூறி மக்களை ஏமாற்றி வருகிறது என்றார்.

திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் திங்கட்கிழமை(21) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், அரசியல் களத்தில் முதலாளித்துவம், சோசலிசம், கம்யூனிசம், சமூக ஜனநாயகம் என பல்வேறு கோட்பாடுகள் காணப்படுகின்றன. இவற்றில் சமீபத்தில் இணைந்ததோர் கோட்பாடு தான் பொய்யும் பாசாங்குத்தனமுமாகும் என்றார்.

ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் பொய்யான கோரிக்கைகளை முன்வைத்த மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான திசைகாட்டி அரசாங்கம், தற்போது புதிய கூற்றுக்களை முன்வைத்து, முட்டாள்தனமாகப் பிரஸ்தாபிக்கும் அரசாங்கமாக மாறியுள்ளது. நாட்டு மக்களை ஏமாற்றும் அரசாங்கம் இன்று செய்வதறியா அரசியலை முன்னெடுத்து வருகிறது.

33 சதவீதத்தால் மின் கட்டணத்தைக் குறைப்போம் என வாக்குறுதி வழங்கியிருந்தனர்.

ஆனால், ஆட்சிக்கு வந்த பிறகு இன்னும் 6 மாதங்களுக்கு மின் கட்டணத்தைக் குறைக்க முடியாது என்றனர். இதனால் பொதுமக்கள் கொந்தளித்து பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவை நாடிய போது, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு 20 சதவீதத்தால் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்தது. இந்த மின்சார கட்டண குறைப்பை அரசாங்கமோ ஜனாதிபதியோ எடுக்கவில்லை. எஞ்சியுள்ள 13 சதவீத குறைப்பை இந்த அரசாங்கம் விரைந்து எடுக்க வேண்டும்.

இந்த பொய், திருட்டு, ஏமாற்றுதல் போன்றவற்றால் தொடர்ந்தும் நாம் ஏமாறுவதா இல்லையா என்பதை இந்நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும். ஆளுந்தரப்பினர் பழைய பொய்களோடு புதிய பொய்களையும் முன்வைத்து வருகின்றனர். வரவு-செலவுத் திட்டத்தில் கூட இல்லாத சலுகைகளை வழங்குவதாகப் பொய் சொல்கிறார்கள்.

திசைகாட்டி அதிகாரங்களைக் கைப்பற்றாத உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட மாட்டாது என ஜனாதிபதி தேர்தல் சட்டங்களை மீறி பகிரங்கமாகக் கூறிவருகின்றார்.



உள்ளூராட்சி சட்டங்கள் குறித்து போதிய விளக்கம் ஜனாதிபதிக்கு இல்லை. அதனாலேயே இவ்வாறான கருத்துக்களை வெளிப்படுத்தி வருகிறார்.

உள்ளூராட்சி மன்ற சட்டம் மிகவும் வலுவான சட்டமாகும். இதனை ஜனாதிபதி சரியாக வாசிக்காமல் முட்டாள்தனமாகப் பேசி வருகிறார் என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக் காட்டினார்.

# "கரிசனைகளுக்கு செவிசாய்க் தயார்"

இந்த நாட்டில் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதிலும், குடும்ப அலகைப் பராமரிப்பதிலும், சமூகத்தைப் பராமரிப்பதிலும் சிறப்பாகப் பணியாற்றும் பெண்களின் பிரதிநிதித்துவம் எம்மிடம் மிகக் குறைவாகவே உள்ளது. எனவே அடுத்த தேர்தலில் வன்னி மாவட்டத்திலிருந்து சகோதர உறுப்பினர்களை மட்டுமல்ல, சகோதரிகளான உறுப்பினர்களையும் பாராளுமன்றத்திற்கு அனுப்புமாறு நாங்கள் உங்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

வவுனியா தற்போது அபிவிருத்தியடைந்து வரும் நகரமாக உள்ளது. ஒரு உள்ளூராட்சி மன்றத்தினால் நடக்க வேண்டிய விடயங்கள் நடைபெற வேண்டும். கிராமத்தின் வளர்ச்சியில் உள்ளூராட்சி மன்றம் செயற்திறமாக தலையிட வேண்டும்.

வடபகுதி மக்களுக்கு கல்வி மிகவும் முக்கியமானது என்பதை நாங்கள் அறிவோம். நீங்கள் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறீர்கள். பொதுவாக, நாட்டில் கல்வி வீணடிக்கப்பட்டு பலவீனப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளது. குறிப்பாக வடக்குப் பகுதி கல்வித் துறைக்கு போதுமான கவனம் செலுத்தப்படாததால், மற்ற பகுதிகளை விட மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இதற்கிடையில், நான் இன்னும் ஒரு பயங்கரமான விடயம் பற்றி அறிந்தேன். இளைஞர் யுவதிகள் கல்வியின் மீது வைத்திருக்கும் மதிப்பு குறைந்து வருகிறது. போதைப்பொருள் மற்றும் மது இப்போது எல்லா இடங்களிலும் சாதாரணமாக கிடைக்கிறது. இவற்றில் இருந்து விலகி இளைஞர்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு இங்கே வேறு வழிகள் இல்லை. விஞ்ஞானம், கலை, நாடகம் போன்ற துறைகளில் வளர்ச்சி இல்லாததால் அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கான வழியை இழந்துவிட்டனர். எனவே இதற்கு ஒரு பெரிய தலையீடு தேவை என்பதை உணர்ந்தேன்.

ஊழல் இல்லாத ஒரு குழுவை நீங்கள் தெரிவுசெய்தால், நாங்கள் உங்களுக்காக ஒதுக்கும் பணத்தை பயமின்றி ஒப்படைக்க முடியும். உங்கள் கிராமத்தின் வளர்ச்சிக்கு இதைப் பயன்படுத்த முடியும். "அதனால்தான் உங்கள் தெரிவு எங்களுக்கு முக்கியமானது" என்று பிரதமர் கூறினார்.

இந்தக் சந்திப்புகளில் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். திலகநாதன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஜெகதீஸ்வரன் ஆகியோர் உட்பட பல உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர்கள் மற்றும் பிரதேச வாசிகள் கலந்து கொண்டனர்.

# "ஈஸ்டர் தாக்குதலில் அரசு...

இதைத் தொடர்ந்து, 2021பெப்ரவரி 25, அன்று அல்லது அதற்குள், பாராளுமன்றத்தில் இந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இந்த ஆணைக்குழு அறிக்கையை பாராளுமன்றத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளம் வழியாக பொதுமக்கள் இன்னும் அணுகலாம்.

இந்த அறிக்கையின் உள்ளடக்கங்களை சட்டமா அதிபர் ஏற்கெனவே வைத்திருக்கிறார். மேலும் முழுமையாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது .

துரதிர்ஷ்டவசமாக, தற்போதைய அரசாங்கம் 'ஈஸ்டர் தாக்குதல்கள்' என்ற தேசிய துயரத்தை ஓர் அரசியல் கருவியாகப் பயன்படுத்திக் கொள்கிறது, உணர்ச்சிபூர்வமான பதில்களைத் தூண்டவும், நடந்து வரும் உள்ளாட்சித் தேர்தல் செயல்முறையின் மத்தியில் பொதுமக்களின் உணர்வுகளை கையாளவும் அதைப் பயன்படுத்துகிறது. இத்தகைய நடத்தை மலிவான மற்றும் சூழ்ச்சிகரமான அரசியல் சந்தர்ப்பவாதம் அரசுக்கு ஏற்படுத்தும் ஒரு சரிவைக் குறிக்கிறது.

ஒரு சட்டபூர்வமான குற்றவியல் விசாரணை புறநிலை மற்றும் பாரபட்சமற்ற தன்மையுடன் நடத்தப்பட வேண்டும். முதலில் ஒரு இலக்கை அடையாளம் கண்டு, பின்னர் ஒரு முன்கூட்டிய குற்றச்சாட்டை ஆதரிப்பதற்கான ஆதாரங்களைத் தேடுவது ஒரு விசாரணை அல்ல - இது தனிநபர்களை, குறிப்பாக மாறுபட்ட அரசியல் கருத்துக்களைக் கொண்டவர்களைத் துன்புறுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு திட்டமிடல் ஆகும்.

இந்த அரசாங்கம், இந்த துக்ககரமான தேசிய துயரத்தை அரசியல் ஆதாயத்திற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும் என்று நான் கடுமையாக வலியுறுத்துகிறேன். இத்தகைய நடவடிக்கைகள் நேர்மையற்றவை மட்டுமல்ல, பாதிக்கப்பட்டவர்களின் நினைவை மிகவும் அவமதிப்பவை. இது, எல்லா வகையிலும், பொருத்தமற்றது, இழிவானது மற்றும் வெட்கக்கேடானது என்றார்.

# "தில் இருந்தால் வழக்கு தாக்கல் செய்க"

வி.ரி.சகாதேவராஜா

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விதிகளை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அப்பட்டமாக மீறி உள்ளார். சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவுக்கு உண்மையில் தில் இருந்தால் ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யுங்கள் பார்க்கலாம் என தமிழரசுக் கட்சி கட்சியின் பதில் செயலாளர். எம்.ஏ சுமந்திரன் சவால் விடுத்தார் .



இலங்கை தமிழரசுக் கட்சியின் திருக்கோவில் பிரதேச சபை வேட்பாளர்களுக்கான அறிமுக கூட்டத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார். இந்த அறிமுகக் கூட்டம் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவி. கோடீஸ்வரன் தலைமையிலே திருக்கோவில் தம்பிலுவிலில் ஞாயிற்றுக்கிழமை (20) நடைபெற்றது.

அங்கே சுமந்திரன் மேலும் உரையாற்றுகையில்,

இலங்கையிலே ஊழல் அற்ற தூய்மையான கட்சி என்றால் அல்லது தூய்மையான ஆட்சி என்றால் அது இலங்கை தமிழரசுக் கட்சி ஒன்றுதான்.ஏதோ ஒரு மாற்றம் வேண்டும் என்று இலங்கை மக்கள் பாராளுமன்ற தேர்தலிலும் ஜனாதிபதி தேர்தலிலும் சிவப்புக் கட்சிக்கு வாக்களித்தார்கள் . ஆனால், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் முக்கியமானது.

ஏதோ தமிழ் மக்கள் இரண்டு தேர்தல்களிலும் தங்களுக்கு ஆணை தந்துள்ளதாகக் கத்துகிறார்கள். அந்த பிரேமையை இந்த தேர்தலில் தகர்க்க வேண்டும். உலகத்திற்கு ஒரு செய்தியைச் சரியாக நாம் சொல்ல வேண்டும் .

அதாவது , நாம் என்றும் எமது அரசியல் உரிமைகளுக்காகப் பயணிக்கும் தமிழரசுக் கட்சியோடு தான் நிற்கின்றோம் என்ற செய்தியை இந்த ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் நாங்கள் உரத்திச் சொல்ல வேண்டி இருக்கின்றது .

ஜனாதிபதி அனுர, அப்பட்டமாகவே இத்தேர்தலில்

விதிமுறைகளை மீறி இருக்கின்றார். அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்று அரசியல் அமைப்பு எந்த இடத்திலும் சொல்ல இல்லை. அவருக்கு வழக்கு தாக்கல் செய்யலாம் என்றார்.

எனவே, ஊழலற்ற அரசு அனைத்து மக்களையும் ஒன்றாக பார்க்கின்ற அரசாங்கம் என்று சொன்னால் இந்த நாட்டிலே வாழ்கின்ற சகல இன மக்களையும் ஒன்றாகவே வழி நடத்த வேண்டும் .

ஆனால், தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்கும் சபைகளுக்கு எமது அபிவிருத்திக்கான நிதியை ஒதுக்குவோம் என்று முன்னே கூறிவிட்டு இப்பொழுது அப்படி கூறவில்லையாம் என்று மறுக்கின்றார்கள் .இப்படித்தான் அனைத்து செயற்பாடுகளும் தொடர இருக்கின்றது.

ஆகவே, மக்களே நாங்கள் தெளிவடைய வேண்டும் .ஆகவே? தேர்தல் அன்று அக்கம் பக்கம் பார்க்க வேண்டிய அவசியமில்லை. நேராக சென்று நாங்கள் தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும். அப்பொழுதுதான் நாங்கள் தலை நிமிர்ந்து நிற்கலாம். வாழலாம். தவறினால் எமது உரிமைகளை ஒருபோதும் பெறமுடியாமல் போகலாம் என்றார்.

# "ஜனாதிபதியின் உரை...

தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளால் தேர்தல் ஆணைக் குழுவுக்கு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த கடிதம் அனுப்பப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதியின் அறிக்கை உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தின் பிரிவுகள் 92C (தவறான செல்வாக்கு) மற்றும் 82D (அதிகபட்ச நன்மைக்கான வாக்குறுதிகள்) ஆகியவற்றின் தெளிவான மீறலாகும் என்று கண்காணிப்பு அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

கந்தளாய் மற்றும் மன்னாரில் நடைபெற்ற அரசியல் கூட்டங்களில் உரையாற்றிய ஜனாதிபதி, தேசிய மக்கள் சக்தியை உருவாக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குத் தனது கையை நீட்டி நிதி வழங்குவதாக அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# "வீட்டை கேட்டு...

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறைக்கு அவர் வழங்கிய ரகசியத் தகவல்களை வெளியிடுவதா? இல்லையா? என்பதை அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஈஸ்டர் சூத்திரதாரியைக் கண்டுபிடிக்க இன்று ஒரே ஒரு நபர் மட்டுமே தேவை என்று கூறிய முன்னாள் ஜனாதிபதி, இந்த நாட்டின் ஜனாதிபதியாக மீண்டும் வர தனக்கு விருப்பமில்லை என்றும் கூறினார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலால் தான் வருத்தமடைந்ததாகவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த காலத்தில் பல்வேறு குற்றங்களைச் செய்ததாக பிள்ளையான் மீது குற்றம் சாட்டப்பட்டதாகவும், அத்தகைய நபருக்கு அமைச்சர் பதவி வழங்கியது தவறு என்றும் அவர் கூறினார்.

# "சுயாதீன வழக்கு விசாரணை...

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான முழுமையான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும் என்பதுடன், பொதுமக்களுக்கு அதனை பகிரங்கப்படுத்த வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான விசாரணைகள் வழக்குகளை கண்காணிப்பதற்கு சுயாதீன வழக்கு விசாரணை அலுவலகத்தை ஏற்படுத்த வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்ட அனைத்து சக்திகளையும் அடையாளம் காணவேண்டும், உண்மையை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு காரணமானவர்கள் அவர்கள் எந்த பதவியில் இருந்தாலும் அவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும்.

கடந்த 2019ஆம் ஆண்டு செப்டெம்பர் 21ஆம் திகதியிடப்பட்ட விசாரணைகைள மேற்கொள்வதற்காக ஜனாதிபதி நியமித்த ஆணைக்குழுவின் அனைத்து பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

அத்துடன், சஹ்ரான் ஹாசிமிற்கும் இராணுவபுலனாய்வு பிரிவிற்கும் இடையிலான தொடர்புகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும், முக்கிய சாட்சியான ஆசாத் மௌலானா தெரிவித்த விடயங்கள் உட்பட செனல்-4 இன் ஆவணப்படத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சதித்திட்டத்திற்கு காரணமான துணை இராணுவ குழு கட்டமைப்புகளை செயல் இழக்கச்செய்வதற்காக புதிய சட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.

ஆட்சியில் உள்ளவர்கள் மக்களை ஆள்வதை விட மக்களுக்கு சேவையாற்றுவதை உறுதி செய்யும் புதிய கலாசாரத்தை ஏற்படுத்த வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.


# 20 ரிட் மனுக்கள் தள்ளுபடி

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட சுமார் 20 ரிட் மனுக்களை தள்ளுபடி செய்து மேல்முறையீட்டு நீதிமன்றம் திங்கட்கிழமை (21) உத்தரவிட்டது.

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து பல அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தாக்கல் செய்த பல ரிட் மனுக்களை பரிசீலித்த பின்னர், மேல்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

# மேர்வின் உள்ளிட்ட நால்வருக்கு விளக்கமறியல் நீடிப்பு

காணி ஒன்றுக்கு போலி ஆவணங்களை தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட நால்வரை எதிர்வரும் மே மாதம் 05ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு திங்கட்கிழமை (21) அன்று மஹர நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட நால்வரும் திங்கட்கிழமை (21) அன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்கு போலி ஆவணைங்களை தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் பத்தரமுல்லை பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து கடந்த மார்ச் மாதம் 05ஆம் திகதி குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தலதா கண்காட்சி நேரம் நீடிப்பு



கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் முன்னெடுக்கப்படும் தலதா தந்த தாது கண்காட்சி, பார்வையிடும் நேரம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், முற்பகல் 11 மணி முதல், மாலை 5 மணி வரையிலும் பார்வையிடலாம் என அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமைச்சர் பங்களாக்களில் பெறுமதியானவை மாயம்



சில அமைச்சர் பங்களாக்களில் பெறுமதி மிக்க பகுதிகள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிகிறது என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

சில பங்களாக்களைச் சுற்றி அதிகப்படியான காடுகள் வளர்ந்திருப்பதால் பல அமைச்சர் பங்களாக்கள் பாழடைந்து விட்டதாகவும் அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படாததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இதற்கிடையில், பல அமைச்சர் பங்களாக்கள் பயன்படுத்த முடியாததாகி விட்டதாக அமைச்சு கூறுகிறது.

அவற்றைப் பயன்படுத்துவதற்கு முன்பு பழுதுபார்க்க வேண்டியிருக்கும் என்றும், புதுப்பிப்பதற்கான நிதியைத் திரட்டுவது ஒரு பிரச்சினை என்றும் அமைச்சக செய்தித் தொடர்பாளர் கூறினார்.

கொழும்பு நகரில் அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட சுமார் ஐம்பது பங்களாக்கள் உள்ளன. புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை இந்த பங்களாக்களைப் பயன்படுத்துவதில்லை என்று முடிவு செய்துள்ளது.

இந்த அமைச்சர் பங்களாக்களைப் பொருளாதார ரீதியாக உற்பத்தி செய்யும் திட்டங்களுக்குப் பயன்படுத்த அரசாங்கம் நம்புகிறது.




மோட்டார் சைக்கிள்

# நாய் மீது மோதியதில் இருவர் பலி

கலேவெல-குருநாகல் பிரதான வீதியில் மோட்டார் சைக்கிள் நாய் மீது மோதி வீதியோர வடிகாலில் கவிழ்ந்ததில் இருவர் உயிரிழந்தனர், மற்றொருவர் காயமடைந்தார்.

தெஹியத்தகண்டிய பகுதியைச் சேர்ந்த 31 மற்றும் 21 வயதுடையவர்களே இவ்வாறு உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் இருந்த ஒரு குழந்தை காயமடைந்து தம்புள்ளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# விபத்தில் 22 சிப்பாய்கள் காயம்




நிட்டம்புவ - கிரிந்திவெல வீதியில் திங்கட்கிழமை (21) காலை இடம்பெற்ற விபத்தில் இராணுவ சிப்பாய்கள் உட்பட 22 பேர் காயமடைந்துள்ளதாக கிரிந்திவெல பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவ சிப்பாய்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த பஸ் சாரதியும் அதில் பயணித்த 21 இராணுவ சிப்பாய்களும் சிகிச்சைக்காக வத்துபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரிந்திவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# “பாதிக்கப்பட்டோர் குறித்து விசேட கவனம்”



போர் நிகழ்ந்த பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகள் மற்றும் மக்களின் இயல்பான வாழ்க்கை குறித்தும் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும் எனவும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய கருத்துத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பலை மற்றும் பூனகரி ஆகிய பிரதேசங்களில் சனிக்கிழமை (19) அன்று நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் மக்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

“கிளிநொச்சி மாவட்டம் என்பது, யுத்தம் நடைபெற்ற காலம் முழுவதும் பாதிப்பிற்குட்பட்ட மக்கள் வாழ்கின்ற மாவட்டமாக உள்ளதோடு, யுத்தம் காரணமாக அங்கவீனமுற்ற அதிகமானோரும் இங்கு வாழ்கின்றார்கள். இளைய தலைமுறையினரின் பெற்றோர்களில் அதிகமானோர் அக்காலத்தில் நடைபெற்ற போரினால் அங்கவீனமுற்றவர்களாகவே காணப்படுகிறார்கள்.

வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் வாழ்கின்ற பெண்களில் அநேகமானோர் நுண் நிதிக் கடன்களைப் பெற்று, மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். அவர்கள் அந்நிதியை தங்களது குடும்பத்திற்காக அல்லது பிள்ளைகளின் படிப்பிற்காக பெற்றிருப்பார்கள்

ஒரு சில பிரதேசங்களில் இறுதிச் சடங்கை மேற்கொள்வதற்கான மயானங்கள் கூட காண்பதிற்கில்லை. அது மிகவும் வருந்தத்தக்க விடயமாக உள்ளது.

ஒரு சில பிரதேசங்களில் குடி நீர்ப் பிரச்சினை உள்ளது. அதில் உப்புத் தன்மை கலந்திருப்பதனால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதேபோன்று பிள்ளைகளுக்குச் செல்ல நல்ல பாடசாலைகளும் இல்லை.

இவையனைத்தும் பெரிய பிரச்சினைகளில்லை. இப்பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க நம்மால் முடியும். ஆனால், முன்னைய ஆட்சியாளர்கள் இவற்றைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அதனால்தான் நீங்கள் இவ்வாறு துன்பப்படுகின்றீர்கள்.

16 ஆண்டுகளின் பின்னர் யுத்தத்தினால் அழிவுற்றிருந்த தென்னை மரங்கள், பனை மரங்கள் மீண்டும் வளர்ந்திருப்பதை நாங்கள் காண்கிறோம். ஆனால், அதனை விட இந்தப் பிரதேசங்களில் எவை மாறியிருக்கின்றன? மக்களின் வாழ்வாதாரம் மாறியிருக்கிறதா? யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் உள்ள பிரச்சினைகளை ஆராயும் போது அவற்றைத் தெளிவாக அறிந்து அப்பிரதேசங்களின் பால் விசேட கவனம் செலுத்தப்படுவது அவசியமாக உள்ளது.

வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் கல்வி, சுகாதாரம், நெடுஞ்சாலைகள், வாழ்வாதாரம் போன்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை யுத்தம் முடிவடைந்து பல வருடங்களாகியும் அவை நிறைவேற்றப்படாமல் உள்ளன.

அதற்காக பிரதேச மட்டத்தில் சரியான தலைமைத்துவத்தை உருவாக்குவதற்கான தேவை கடுமையாக உணரப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில், சுற்றுலாத்துறையின் பால் ஈர்க்கப்படுகின்ற பிரதேசங்களை அபிவிருத்தி செய்து பொருளாதார ரீதியில் வலுவூட்டுவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் அவ்வாறு பலமானதொரு அபிவிருத்தியடைந்த பிரதேச சபைகளையும், நகர சபைகளையும் கட்டியெழுப்பும் நோக்கில் மக்களுக்கு செவிசாய்க்கக்கூடிய, மக்களுக்காக செயற்படக்கூடிய தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து கிராமத்தைப் பலப்படுத்துவதற்கு மக்களுக்கு ஒன்றிணையுமாறு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய அழைப்பு விடுத்தார்.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன், தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இலங்குமரன், கருணானந்தன் ஆகியோர், கிளிநொச்சி மாவட்டத்தின் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் உள்ளிட்ட பல பிரதேச மக்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர்.

# சாமரவின் விளக்கமறியல் நீடிப்பு



பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவை பதுளை நீதவான் நீதிமன்றம் 2025 மே 05 ஆம் திகதி வரை மேலும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சாத்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக சாமர சம்பத் தசநாயக்க மேலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க, கடந்த மார்ச் 27ஆம் திகதி, இராஜாங்க அமைச்சராக இருந்த காலத்தில் சுமத்தப்பட்ட 03 ஊழல் குற்றச்சாட்டுகளின் பேரில், வாக்குமூலம் பதிவு செய்த பின்னர், இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சாத்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டார்.

இரண்டு ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக அவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார், அதே நேரத்தில் ஒரு குற்றச்சாட்டிற்காக அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டில் ஊவா மாகாண முதலமைச்சராக சாமர சம்பத் தசநாயக்க கடமையாற்றிய போது பாடசாலை மாணவர்களுக்குப் புத்தகப்பை வழங்குவதற்காக மாகாண சபை ஊடாக வங்கியிலிருந்து 10 இலட்சம் ரூபாவை காசோலையாகப் பெற்று அதனைப் பணமாக மாற்றித் தனிப்பட்ட தேவைக்காகப் பயன்படுத்தியமை உள்ளிட்ட ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சாத்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இன்றைய தினம் மீண்டும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் மே மாதம் 05 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உஷ்ணத்தை தணிக்க

# பனை, நுங்கு அருந்தும் மக்கள்

ரீ.எல்.ஜவ்பர்கான்



கிழக்கு மாகாணத்தில் தற்போது அதிக வெப்பமான காலநிலை நிலவி வருவதால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதிக உஷ்ணம் காரணமாக குளிரான பானங்களையும், நீரையும் அருந்துவதில் பொதுமக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பனையில் இருந்து கிடைக்கின்ற நுங்கு அருந்துவதில் பொதுமக்கள் அதிக ஆர்வம் காட்டுவதை அவதானிக்க முடிகின்றது.

மட்டக்களப்பு கல்முனை , மட்டக்களப்பு -கொழும்பு நெடுஞ்சாலைகளில் பாதை ஓரத்தில் அதிகளவிலான இடங்களில் நுங்கு விற்பனை செய்யப்படுகிறது.


அப்பாதையினால் பயணிக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவிலானோர் நுங்கு அருந்தி உஷ்ணத்தைத் தணிப்பதைக் காண முடிகின்றது.

இதனால் அப்பிரதேசத்திலுள்ள சாதாரண வியாபாரிகள் நன்மை அடைந்து வருவதுடன் வருமானத்தையும் பெற்று வருகின்றனர்.

மின்னல் தாக்கியதில்

# தாய் மரணம்

சுமனசிறி குணதிலக



மின்னல் தாக்கியதில் நான்கு பிள்ளைகளின் தாய் உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று மொனராகலை குடா ஓயா பொலிஸ் பிரிவின் மகாயாய பகுதியில் சனிக்கிழமை (20) அன்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தன்று மாலை 5 மணியளவில், கொட்டும் மழையில் இவர் தனது வீட்டுக்கு அருகில் உள்ள காணியில் வேலை செய்துக்கொண்டிருக்கும் போது மின்னல் தாக்கி காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் தெஹிகஸ்ஹந்திய பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# “உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிகள் யார்?”

நூருல் ஹுதா உமர்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு உச்சபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடியில் ஞாயிற்றுக்கிழமை (20) அன்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தங்களது அரசியல் தேவைகளுக்காக, ஆட்சிகளை கொண்டு வருவதற்காக, ஆட்சிகளை உருவாக்குவதற்காக சிலர் முஸ்லிம் இளைஞர்களை திசை திருப்பி இவ்வாறு மிக மோசமான செயலை மேற்கொண்டிருந்தார்கள். இதன் மூலம் முழு முஸ்லிம் சமூகமும் தலை குனிந்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதில் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும், அவர்களுடைய குடும்பங்களுக்காகவும் பிரார்த்திக்கிறோம்.

இச் செயலுக்காக நாங்கள் மிகவும் மன வேதனை அடைந்தோம். இன்னும் அந்த வேதனை அடைகின்றோம்.

காத்தான்குடி பிரதேசம் அநியாயமாக பல சோதனைகளையும் சவால்களையும் சந்தித்தது என்பதை அனைவரும் அறிவீர்கள். தற்போது தான், சில உண்மைகள் வெளிவந்து கொண்டிருக்கிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் யார் இருந்தார்கள்?, யார் இதை செய்தார்கள்? என்ற உண்மைகள் வெளிப்படுத்தப்படுவதோடு, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு உச்சபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

# இருண்ட நினைவுக்கு ஆறாண்டுகள் கடந்து விட்டன

இலங்கையர்களுக்கு மட்டுமன்றி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏப்ரல் 21ஆம் திகதி இருண்ட நாளாகவே அமையும். இன்றைக்கு ஆறு வருடங்களுக்கு முன்னர் 2019 ஏப்ரல் 21ஆம் திகதியன்று, கிறிஸ்தவ தேவாலயங்கள், நட்சத்திர ஹோட்டல்களில் நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத்தாக்குதல்களின் கோரத்தில் இருந்து பலரும் இன்னும் விடுபடவில்லை.

இந்த தாக்குதல்களில் குழந்தைகள் உட்பட 269 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கான குழந்தைகள் அனாதைகளாக்கப்பட்டனர். பலரும் நிரந்தரமாக ஊனமுற்றவர்களாக மாற்றினர். எனினும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைத்துள்ளது. நீதிக்காக இன்னும் கையேந்தியுள்ளனர் என்பதுதான் உண்மையாகும்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து வந்த ஒவ்வொரு தேர்தலிலும், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் என்ற வாக்குறுதி, அரசியல் மேடையில் வெறும் பிரச்சார வாக்குறுதியாகவே மாறியது.

தங்கள் மதத்தைப் பின்பற்றுவதற்காகத் தேவாலயத்திற்குச் சென்ற கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்த மத மையத்திலேயே தங்கள் உயிரை இழந்தது ஒரு பெரிய சோகம். மனிதநேயத்தை மதிக்கும் எந்த சூழ்நிலையிலும் நடக்கக்கூடாத ஒரு சூழ்நிலை அது. தடுக்கப்பட்டிருக்கக்கூடிய தாக்குதலைத் தடுக்கவில்லை என்று பலர் அதை விளக்கினர். அந்த நேரத்தில் அதிகாரத்தில் இருந்த பலர் இதற்காகக் குற்றம் சாட்டப்பட்டனர். உளவுத்துறை அறிக்கைகள் இதை சுட்டிக்காட்டிய போதிலும், முறையான நடவடிக்கை எடுக்காததற்காக அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதிகாரத்தைக் கைப்பற்றித் தக்கவைத்துக் கொள்வதற்காக, உளவுத்துறை அறிக்கைகளைப் புறக்கணித்து, உணர்ச்சியற்ற முறையில் செயல்பட்ட ஆளும் வர்க்கமும், அடுத்தடுத்து வந்த அதிகாரிகளும் இருந்தனர் என்பதற்கு இந்த சம்பவம் சான்றாகும். சட்டத்தினாலோ அல்லது வேறு எந்த நிபந்தனையினாலோ அவர்கள் விடுவிக்கப்பட்டாலும், அவர்களின் மனசாட்சியிலிருந்து அவர்களை விடுவிக்க முடியுமா என்பதுதான் நம் முன் உள்ள கேள்வி.

தற்போதைய ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவும், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படும் என்று மக்கள் முன் பலமுறை உறுதியளித்தார். இதற்கான விசாரணைகள் முறையான முறையில் நடத்தப்பட்டு வருவதாகவும், இதற்கு சிறிது காலம் தேவைப்படுவதாகவும், அரசியல் ரீதியாக அடக்கப்பட்ட சம்பவங்கள் குறித்து மீண்டும் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டது. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பிலான முழுமையான அறிக்கையை குற்றப்புலனாய்வு பிரிவிடம் (சி.ஐ.டி) ஒப்படைக்குமாறு, ஞாயிற்றுக்கிழமை(20) பணித்திருந்தார்.

இந்தத் தாக்குதலில் தொடர்புடைய அனைத்து தரப்பினரும் சமூகத்தின் முன் அம்பலப்படுத்தப்பட்டு சட்டத்தின் மூலம் தண்டிக்கப்படுவது அவசியம். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுக்கு அரசியல் தொடர்பு இருப்பது இந்த நாட்டில் உள்ள பெரியவர்கள், சிறியவர்கள் என அனைவரும் அறிந்த உண்மை. அந்த ஊழல் நிறைந்த அரசியல் வர்க்கத்தை சமூகத்திற்கு அம்பலப்படுத்த வேண்டும் என்பதே எமது வலியுறுத்தலாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு

எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

உங்கள் நெஞ்சத்தை நீங்களே உடைத்து, உங்களை குற்றவாளியாக்க வேண்டாம். தேவையற்று எதற்கும் சலனப்பட்டு கலங்குவது நிறுத்தப்பட வேண்டும். துணிச்சல் இன்றேல் வாழ்வில் இனிமை துலங்காது.

பிறர் கூறும் கடுஞ்சொற்களைக் காதுகொடுத்துக் கேட்டலாகாது. இத்தகையவர்கள் வேண்டுமென்றே மனதைக் கலைத்துவிடும் செய்திகளைச் சொல்வதுண்டு.

மேலும், குடும்பத்தில் கோபத்தைக் காட்டலாகாது. நிதிப் பிரச்சினை, அலுவலகப் பிரச்சினை என பலதரப்பட்ட அழுத்தங்களை அநேகர் அனுபவித்து வருவதுண்டு.

எந்தப் பாரிய பிரச்சினைகளையும் உடைக்க முடியும். திட்டமிட்டு கருமங்களை ஆற்றுக! உங்களுக்கு நீங்களே எஜமானன். மறக்க வேண்டாம்!

உங்களுக்கு எனப் பல கடமைகள் உண்டு. அவை பாரமானது என எண்ணினால், சின்ன விடயங்களும் பெரும் பாரமாகி விடும்.

எப்பொழுதும் மனதை இலேசாக்கி, அனைவரிடமும் சகஜமாகப் பழகினால், அழுத்தங்கள் குறைந்து விடும். வாழ்க்கையை இரசித்தால் நிம்மதி நிச்சயம்.

–பருத்தியூர் பாலவயிரவநாதன்

### உள்ளூராட்சித் தேர்தல் ஊடாக

# முஸ்லிம்களுக்கான அரசியல் மீண்டெழுமா?

மொஹமட் பாதுஷா

முஸ்லிம் சமூகத்திற்கான அரசியலை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை தெட்டத்தெளிவாக உணரப்படுகின்ற ஒரு காலத்தில் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொண்டுள்ளோம்.

முஸ்லிம் மக்கள் பெரும்பான்மைக் கட்சிகளுடன் இணைந்து அரசியல் செய்வது என்பது வேறு விடயம். ஆனால், சமகாலத்தில் ஒரு சமூகமாக முஸ்லிம்கள் தமக்கான பிரத்தியேக அரசியல் வழித்தடம் ஒன்றை வைத்திருக்க வேண்டியுள்ளது.

இங்கே, முஸ்லிம்களுக்கான அரசியலைப் பலப்படுத்துவது என்பது 'ஆட்கள்', அதாவது அரசியல்வாதிகள் பற்றியதல்ல. மாறாக, சமூகத்தை மையமாகக் கொண்ட, அரசியலைத் தனித்துவமாக முன்னெடுக்கக் கூடிய ஒரு கொள்கை, கோட்பாடு, ஒழுங்கமைப்பு, வழித்தடம் அவசியம் என்பதையே வலியுறுத்துகின்றது.

ஆழமாகச் சிந்திக்கின்ற மக்கள் பிரிவினர் இதனைக் கொஞ்சம் உணர்ந்திருக்கின்றனர். ஆனால், பெரும்பாலான மக்கள் தமக்கான அரசியல் தூர்ந்து போவது பற்றிய பாரதூரத்தைப் பெரிதாகக் கவனத்தில் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. தேர்தல் முசுப்பாத்திகளில் காலம் கழிகின்றது.

இந்த விடயத்தின் பாரதூரத்தன்மையை அதிகம் உணர்ந்து செயற்பட வேண்டியவர்கள் முஸ்லிம் கட்சித் தலைவர்களாவர். ஏனெனில், முஸ்லிம் அரசியலின் இறங்குமுகம் என்பது சமூகத்திற்கு நீண்டகால ரீதியாக ஒரு இழப்பாக அமைவது ஒருபுறமிருக்க, உடனடியாகவே அது முஸ்லிம் கட்சிகளின் பிழைப்பைக் கேள்விக்குள்ளாக்குகின்றது.

ஆனால், அந்தப் புரிதல் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு இருக்கின்றதா? என்பதை விட, அதனை அடைவதற்கான களமாக உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் திட்டமிட்டிருக்கின்றார்களா? என்ற கேள்வியே பலமாக எழுகின்றது.

முஸ்லிம்கள் பெருந்தேசியக் கட்சிகளுடன் கலந்து அரசியல் செய்வதை பார்க்கின்றபோது, சமூக நல்லிணக்கம், பொதுமை என தோன்றினாலும், தமக்கான அரசியலைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு பெரும்பான்மை கட்சிகளில் கலந்து கிடப்பது நீண்டகால அடிப்படையில் ஆரோக்கியமானதல்ல.

3 பிரதான முஸ்லிம் கட்சிகள் உள்ளன. இவை தவிர, தேசிய சமாதான கூட்டமைப்பு, தேசிய ஐக்கிய முன்னணி, ஜனநாயக ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசிய முன்னணி, என சிறிய கட்சிகளும் உள்ளன. இது தவிர, அறிக்கைகளில் மட்டும் உயிர் வாழும் சில பெயரளவிலான முஸ்லிம் அரசியல் அணிகளும் உள்ளன.

எது எப்படியிருப்பினும், முஸ்லிம்களுக்கான அரசியலைத் தக்க வைப்பதில் மூன்று காங்கிரஸ்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமே முதன்மைப் பொறுப்புள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் தேக்கநிலை என்பது பெரும்பாலும் அதனது தலைவர் றவூப் ஹக்கீமின் போக்குகளால் ஏற்பட்டதாக ஒரு விமர்சனம் முன்வைக்கப்படுவதுண்டு. ஆனால், அவர் மட்டுமே காரணமல்ல.

ஸ்தாபக தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் காலத்தில் ஒரு பலமான அடித்தளத்தைக் கொண்டிருந்த மு.கா. பின்னர் சரியத் தொடங்கியது. கட்சியில் பிளவுகள் ஏற்பட்டது மட்டுமன்றி ஊர்களுக்குள்ளும் பல அணிகள் உருவாகின அல்லது திட்டமிட்டு உருவாக்கப்பட்டன. இதனை மக்கள் காங்கிரஸ் பயன்படுத்திக் கொண்டது எனலாம்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் மு.கா. தலைவர் ஹக்கீம் தனது வழக்கமான சூத்திரங்களை மீள் வாசிப்புச் செய்தார். தனக்குத் தலையிடியாக உருவாகிவிட்ட அதேநேரம், மக்கள் மத்தியில் விமர்சனத்திற்குள்ளான ஓரிருவரை கழற்றி விட்டார். எம்.எஸ்.உதுமாலெப்பையை களமிறக்கினார்.

ஹக்கீம், தனது காலத்தில் செய்த, சமூகத்தால் ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட சாணக்கிய நகர்வாக உதுமாலெப்பையை வேட்பாளராகப் போட்டு, எம்.பி. ஆக்கியதைக் குறிப்பிடலாம். ஆனால், இதனை சிலர் இன்னும் ஜீரணிக்கவில்லை.

உதுவமாலெப்பை தேசிய காங்கிரஸில் மாகாண அமைச்சராக இருந்த காலத்தில் செய்த ஏகப்பட்ட சேவைகளும், அவரது பண்பியல்புகளும் வெற்றிக்கு வழி விட்டன. இவரது வெற்றிமூலம் ஹக்கீம் மீதான சில விமர்சனங்களைக் குறைக்க முடிந்தது.

இந்த நிலையில், இப்போது நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மு.கா. களமிறக்கியுள்ள வேட்பாளர்கள் எல்லோருமே சிறப்பானவர்கள் என்று கூறி விட முடியாது. அத்துடன், கடந்த காலத்தில் மு.கா. உள்ளூராட்சி சபைகள் ஊடாக அல்லது குறிப்பிட்ட ஊரில் உள்ள எம்.பி. ஊடாக மக்களுக்கு ஏதாவது சேவை செய்திருந்தால் மட்டுமே மக்கள் வாக்களிப்பார்கள்.

அல்லது, இம்முறை நிறுத்தப்பட்டுள்ள வேட்பாளர் அதனைச் செய்வார் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்க வேண்டும். மு.கா. என்கின்ற பிரபலமான வர்த்தக நாமத்தை சில ஊர்களில் சந்தைப்படுத்துவது இலகுவானது என்றாலும் அது எல்லா இடங்களிலும் பலிக்காது.

அதுமட்டுமன்றி, ஒவ்வொரு ஊரிலும் பல குழுக்களாக இயங்கிக் கொண்டு அல்லது அட்டாளைச்சேனையில் இடம்பெற்றதைப் போல எம்.பிக்கும் மத்திய குழுவுக்கும் இடையில் முரண்பாட்டை வைத்துக் கொண்டு, மக்களை ஒற்றுமைப்படுத்தவும் முடியாது. சபைகளை கைப்பற்றவும் இயலாது.

முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் கட்சிக்கு இந்த தேர்தல் வாழ்வா சாவா போராட்டம் என்றுதான் கூற வேண்டும். ஏனெனில், அதாவுல்லா கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வெற்றியை நழுவ விட்டு விட்டார். அக்கட்சி எந்தப் பிரதிநிதித்துவ அரசியல் பதவிகளிலும் தற்போது இல்லை.

எனவே, தேசிய காங்கிரஸ் கட்சியானது உள்ளூராட்சி சபை, மாகாண சபை, நாடாளுமன்றம் என மீண்டும் ஆரம்பத்தில் இருந்தே ஆரம்பிக்க வேண்டிய நிலை உள்ளது. அதற்கான களமாக இத்தேர்தல் அமைந்துள்ளது. இதில் கோட்டை விட்டால், அரசியல் சூனியத்திற்குள் அதாவுல்லாவின் கட்சி மாட்டிக் கொள்ளும்.

இதனை அவர் அறியாதிருக்க முடியாது. அதனாலேயே நீதிமன்றம் வரைச் சென்று வேட்புமனுக்களை எற்றுக் கொள்ளச் செய்திருக்கின்றார். இத்தேர்தலில் தே.கா. சார்பில் அவரது சொந்த ஊர் உட்பட ஒரு சில பிரதேசங்களில் நிறுத்தப்பட்டுள்ள வேட்பாளர்களில் பெரும்பாலானவர்கள் 'பரவாயில்லை' என்ற ரகத்திற்குள் உள்ளடங்குபவர்களாகத் தெரிகின்றனர்.

ஆனால், அதாவுல்லா ஒரு குறிப்பிட்ட எல்லையைத் தாண்டி கட்சியை வளர்க்காமல் விட்டதன் சவாலை ஏனைய பல உள்ளூராட்சி சபைகளில் வேட்பாளர் தெரிவின்போது, சந்தித்திருப்பார் என்று ஊகிக்க முடிகின்றது. அவ்வாறான வேட்பாளர்கள் கடுமையாக வேலை செய்யாத விடத்து வெற்றி தூரமாகிவிடும்.

அதாவுல்லா மீதும் பல விமர்சனங்கள் உள்ளன. ஆயினும், கிழக்கு மாகாணத்தில் அஷ்ரபிற்கு பிறகான அபிவிருத்தி அரசியலில் ஏனையவர்களை விட அதிக அபிவிருத்தி சார் சேவைகளைச் செய்தவர் தேசிய காங்கிரஸ் தலைவர்தான் என்ற கருத்து பரவலாக உள்ளது.

அதனை அவர் பிற்காலத்தில் அரசியல் மூலதனமாக்கத் தவறி விட்டார். உரிமை சார் விடயங்களைப் பேசாதிருந்தாலும், தான் செய்த சேவைகளுக்காக மக்கள் வாக்களிப்பார்கள் என்று எண்ணி தன்னை மீள் வாசிப்புச் செய்யாமல் இருந்து விட்டார் எனலாம்.

ஆனால், இம்முறை களத்தில் இறங்கியே தீரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அந்தக் கட்சி ஒவ்வொரு வட்டாரத்திலும் பொருத்தமான வேட்பாளர்களை நிறுத்தியிருந்தால். அவர்கள் களத்தில் இறங்கி வேலை செய்தால், தே.காவின் தேவைப்பாட்டை மக்கள் உணர்ந்தால்; மட்டுமே முடிவுகள் சாதகமானதாக அமையும்.

இதேவேளை, மு.காவுக்கு பிறகு, குறுகிய காலத்திற்குள் பெருவளர்ச்சி பெற்ற கட்சி என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸைக் குறிப்பிடலாம். இதற்கு அடிப்படைக் காரணம் அதன் தலைவர் றிசாட் பதியுதீனின் அணுகுமுறையாகும்.

அவர் இயல்பான தலைவராகவும் கட்சியை வளர்க்க செலவழிக்கக் கூடியவராகவும் இருந்தார். அதற்காகவும் பணம், பதவிக்காகவும் அவரை நாடி அரசியல்வாதிகள் வந்தனர். மறுபுறத்தில் அவர் மீதான அபிமானத்தினால் மக்கள் ஆதரவும் ஏறுமுகமாக இருந்தது.

வட மாகாண அரசியலில் றிசாட் தவிர்க்க முடியாதவர். கிழக்கு களம் வேறு விதமானது. ஆனால், அதனையும் தாண்டி கிழக்கு மாகாணத்திலும் மக்கள் காங்கிரஸின் அரசியல் வியாபித்தது.

ஆயினும், அவர் மீதான அபிமானத்தை, அனுதாபத்தை சரியாக றிசாட் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அத்துடன், அவர் போக்கில் மாற்றம் அவதானிக்கப்படுகின்றது. முன்னைய காலங்களைப் போலல்லாமல், அவரை யாரோ கூடவிருந்து தவறாக வழிநடத்துகின்றனரா? என்ற கேள்வி அடிக்கடி எழுவதுண்டு.

பொருத்தமற்றவர்களை, அவர்களது பின்புலம், சமூகத்தில் அவர்கள் எப்படி நோக்கப்படுகின்றார்கள் என்று எதனையும் ஆராய்ந்து அறியாமல் எல்லோரையும் கட்சியில் இணைத்துக் கொள்கின்ற போக்கை அண்மைக்காலமாக அவதானிக்க முடிகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் இம்முறை மக்கள் காங்கிரஸ் ஒரு எம்.பியை பெற்றுள்ளது. ஆகவே, முன்னாள் எம்.பி. முசாரப்பின் பிரிவு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்று கருத இடமுள்ளது. ஆனால், கட்சியில் அண்மைக்காலத்தில் இணைந்து கொண்ட சிலரை 'என் இவர் இணைத்தார்?' என்றுதான் உண்மையான ஆதரவாளர்கள் அங்கலாய்க்கின்றனர்.

ஆகவே, றிசாட் பதியுதீனுக்காக அல்லது அதிகம் செலவழிக்கின்றார்கள் என்பதற்காக எல்லா வட்டாரங்களிலும் உள்ள மக்கள் வாக்களிப்பார்கள் என்று கருத முடியாது. உள்ளூராட்சி சபைகளுக்காக நிறுத்தப்பட்ட வேட்பாளர்கள் பொருத்தமானவர்களாக இருக்க வேண்டும்.

இந்த விடயத்தில் றிசாட் இன்னும் கொஞ்சம் சரியாகக் கவனம் செலுத்தியிருக்கலாமோ என்ற எண்ணம் சில ஊர்களின், ஒரு சில வட்டார வேட்பாளர்களைப் பார்க்கும் போது ஏற்படுவதாக அரசியல் அவதானி ஒருவர் கூறுகின்றார்.

ஆக, முஸ்லிம்களுக்கான அரசியலை மீளக் கட்டியெழுப்ப வேண்டும் என்று தலைவர்கள் உணர்ந்து, பொருத்தமான வேட்பாளர்களைக் களமிறக்கி, தீயாய் வேலை செய்தால் மட்டுமே, ஒரு விடிவை எதிர்பார்க்கலாம்.

## கடிதங்கள்

### சுற்றுலாப் பயணிகளின் கோரிக்கை

கிழக்கு மாகாணத்தில் பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலமான மட்டக்களப்பு - பாசிக்குடா கடற்கரைக்கு அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதை அவதானிக்க முடிகிறது.

சித்திரைப் புத்தாண்டு விடுமுறையை முன்னிட்டு உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குடும்பத்துடன் வந்து, மகிழ்ச்சியான முறையில் பொழுதைக் கழிக்க கடலில் நீராடுவதோடு, விளையாட்டுக்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கடற்கரை பகுதியில் இரண்டு மலசலக்கூடங்கள் மாத்திரமே காணப்படுவதால் பெருந்திரளாகக் கடற்கரைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் தங்களுடைய இயற்கைத் தேவைகளை நிறைவேற்ற பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் வாழைச்சேனை பிரதேச சபை நிர்வாகத்தினர் கவனம் செலுத்தி அடிப்படை வசதிகளை நிறைவேற்றித் தருமாறு சுற்றுலாப் பயணிகள் வேண்டிக் கொள்கின்றனர்.

– எச்.எம்.எம்.பர்ஸான்










# சீயோன் தேவாலயத்தில் ...

மட்டக்களப்பு – சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு அன்று நடைபெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 6ஆம் ஆண்டு நினைவேந்தல் திங்கட்கிழமை (21) அன்று நடைபெற்றது.







# மணிகளை ஒலித்து நினைவேந்தல்

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு இன்றுடன் ஆறு ஆண்டுகள் நிறைவடைகின்றன. இந்த தாக்குதல்களில், இறந்தவர்களின் நினைவாக ஹட்டன் பிரதேசத்தில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் இந்து கோவில்களில் மணிகள் ஒலிக்கப்பட்டன.

– ரஞ்சித் ராஜபக்ஷ






# சூசையப்பர் தேவாலயத்தில் ...

மட்டக்களப்பு – கருவேப்பங்கேணி புனித சூசையப்பர் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட ஆத்மாக்களுக்கு அஞ்சலி நினைவு திங்கட்கிழமை (21) அன்று நடைபெற்றது.
















யாழ்ப்பாணம் பெரிய கோவிலில் ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு கலாநிதி ஜெபரட்ணம் தலைமையில் திங்கட்கிழமை(21) அன்று இடம்பெற்றது.

# திருத்தந்தையின் வரலாறு



கத்தோலிக்க திருச்சபை தலைமை மதகுரு போப் பிரான்சிஸ், திங்கட்கிழமை (21) காலை நித்திய இளைப்பாறினார். அவர், நித்திய இளைப்பாற்று அடையும் போது அவருக்கு வயது 88 ஆகும்.

ஜோர்ஜ் மரியோ பெர்கோக்லியோ (*Jorge Mario Bergoglio*) எனும் இயற்பெயர் கொண்ட இவர் தென் (இலத்தீன்) அமெரிக்க நாடான அர்ஜென்டினாவில் உள்ள பெயோனஸ் ஏரஸ் என்னும் சிறு நகரத்தில் 1936ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 17ஆம் திகதி மரியா ஜோஸ் பிரான்சிஸ்கோ - ரெஜினா சிவோரி தம்பதியினருக்கு மூத்த மகனாக ஓர் எளிய குடும்பத்தில் பிறந்தார்.

இவர் கடந்த 1929ஆம் ஆண்டு, இத்தாலியின் ஜெனோவாவிலிருந்து புறப்பட்ட ஜியுலியோ சீசர் என்னும் கப்பலில் பயணித்து இலத்தீன் அமெரிக்க நாடான அர்ஜென்டினாவின் பெயோனஸ் ஏரஸ்க்கு புதிதாகக் குடிபெயர்ந்திருந்தனர்.

ஜோர்ஜ் மரியோ, மரிய எலனே, ஆல்பர்ட்டோ ஹோரசியோ, ஆஸ்கர் அடரியன், மார்த்தா ரெஜினா ஆகிய ஐந்து குழந்தைகளை இத்தம்பதியினர் பெற்றனர். இவர்களில் மூத்தவர்தான் ஜோர்ஜ் மரியோ பெர்கோக்லியோ (நம் திருத்தந்தை) ஆவார்.

ஜோர்ஜ் தன் தாத்தா பாட்டியிடமிருந்து பிட்மோன்டேசே எனப்படும் இத்தாலிய வட்டார மொழியைக் கொஞ்சம் கற்றுக்கொண்டார். அவர்தம் பாட்டி ரோஸாவுடனான உறவு மிகவும் சிறந்தது என்று அவரே பின்னாளில் வியந்துள்ளார். அவர்தம் பெற்றோரிடம் கற்றுக்கொண்டதைவிட தாத்தா, பாட்டியிடம் நிறைய கற்றுக்கொண்டார்.

## சகலகலா வல்லவன்:

ஜோர்ஜ் தம் இளமைப் பருவத்தில் விளையாட்டில் ஆர்வமிக்கவராக விளங்கினார். கால்பந்தாட்டத்தை நேசித்தார். ஆனால், ஜோர்ஜுக்கு மிகவும் பிடித்த விளையாட்டு கூடைப்பந்தாட்டமாகும். அதனை அவ்வளவு ஆர்வத்தோடு விளையாடுவார். நன்கு நடனமாடுவார். அர்ஜென்டினாவில் புகழ்பெற்ற டாங்கோ நடனப் பயிற்சியில் சேர்ந்து அதனை முறைப்படி கற்றுக்கொண்டார். மேலும் அவர் வாழ்ந்த பெயோனஸ் ஏரஸ் பகுதியில் தனித்துவமிக்க அடையாளமாக விளங்கிய மிலாங்கோ நடனத்தை விரும்பி கொஞ்சம் கற்றுக்கொண்டார். இளமைப்பருவத்தில் அமைதியான பொழுதுபோக்கான தபால் தலை சேகரிப்பில், நாட்டமுள்ளவராக விளங்கினார்.

உயர்நிலைக் கல்வியை தம் பதின்மூன்றாம் வயதில் தொடங்கியபோது, அவர்தம் தந்தை குடும்பத்திற்கு உதவும் பொருட்டு வேலைக்குச் செல்லும்படி பணித்தார். தந்தையின் சொல்லுக்குச் செவிசாய்த்து, காலுறைத் தயாரிக்கும் தொழிற்சாலையில் பகுதிநேர வேலைக்குச் சேர்ந்து குடும்பத்திற்கு சிறிது காலம் உதவினார். மேல்நிலைக் கல்வி முடித்தவுடன், பெயோனஸ் ஏரஸ் பல்கலைக்கழகத்தில் உயர் கல்விக்காக அடியெடுத்து வைத்தார். அங்குதான் உணவு வேதியியல் கற்றுக் கொண்டே முதுகலைப்பட்டம் பெற்றார்.

## இறையழைத்தலின் விதை

ஜோர்ஜ்க்கு 17 வயது ஆன பொழுது, மாணவர் தினத்தன்று தன் தோழர்களோடு இணைந்து வழக்கமாக மேற்கொள்ளும் ஓர் இன்பச் சுற்றுலாவில் கலந்துக்கொள்ள வேண்டுமென திட்டமிட்டிருந்தார். அது செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி. (புனித மத்தேயு திருவிழா நாள்).அனைவரும் ரயில் நிலையத்தில் ஒன்றுகூட வேண்டுமென்று திட்டம். நல்ல கத்தோலிக்க இளைஞரான ஜோர்ஜ், அங்குச் செல்வதற்கு முன்பு தன் பங்கு ஆலயமான சான் ஜோஸ் தே ஃபுளோரஸ் க்குச் சென்று, நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து விட்டு, சுற்றுலாவுக்குச் செல்ல வேண்டுமென்று முடிவெடுத்திருந்தார். அவ்வாலயத்திற்கு சென்ற போது, இதற்கு முன்பு இதுவரை சந்தித்திராத ஒரு குருவானவரை எதிர்கொண்டார். அவரும் இவருக்கு பாவசங்கீர்த்தனம் என்னும் ஒப்புரவு அருட்சாதனத்தை வழங்கு இசைவுத் தெரிவித்தார். அந்தக் குருவானவர் பாவசங்கீர்த்தனத்தின்போது இவருக்குள் ஆழமான ஆன்மீக உணர்வை விதைத்தார். இதுநாள் அவருக்குள் உறங்கிக் கொண்டிருந்த விசுவாசம், வீரியமிக்கதாக உயிர்த்தெழுந்தது. அவர் தம் இறையழைத்தலைத் தெளிவாக உணர்ந்தார். இறைவனுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்று உந்துதல் பெற்றார்.

அவ்வாலயத்தில் ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்றவுடன், ரயில் நிலையத்திற்கும் செல்லக்கூடாது என்றும் இன்பச் சுற்றுலாவிலும் கலந்து கொள்ளக்கூடாது என முடிவெடுத்த ஜோர்ஜ், நேராக தன் வீட்டிற்குச் சென்றுவிட்டார். இதுதான் அவர் வாழ்வில் முதல் திருப்புமுனையை ஏற்படுத்திய நிகழ்வு ஆகும்.



எஸ்குவேலா தொழிட்நுட்பக் கல்லூரியில் வேதியியல் தொழில் நுட்பத்தில் பட்டயப் படிப்பு மேற்கொண்டார். வேதியியல் தொழில் நுட்பத்தை அறிந்திருந்ததால் ஹெக்தியர் பேக்மேன் என்னும் ஆய்வகத்தில் ஊட்டச்சத்தைப் பகுத்தாயும் பிரிவில் தன் வேலையை அவர் தொடர்ந்தார். தாம் குருவாகப் போகும் எண்ணத்தையும் அவர்தம் முடிவைக் குறித்தும் எவரிடம் வாய் திறக்கவில்லை. இக்காலக்கட்டத்தில், பள்ளிச் சென்றுக் கொண்டே வேலை செய்து வந்தார். காலை 7 மணிக்கு ஆய்வகத்திற்குள் செல்லும் அவர், மதியம் ஒரு மணிவரை கடுமையாக உழைப்பார். கிடைக்கும் இடைப்பட்ட நேரத்தில், அறக்கப் பறக்க மதிய உணவைச் சாப்பிட்டுவிட்டு, தொழில்நுட்பப் பள்ளிக்குச் செல்வார். அங்கு இரவு 8 மணி வரை தங்கி பயில்வார். பள்ளிப் பருவம் அவர் வாழ்வில் மிக முக்கியமானப் பங்கை வகித்தது.

பராகுவே நாட்டைச் சேர்ந்த ஆசிரியை எஸ்தர் பெலேஸ்டிரினோ தேகாரேகா-வின் பாசத்திற்குரிய தேர்ந்த மாணவராக ஜார்ஜ் விளங்கினார். அவ்வாசிரியைத்தான் அவருக்கு கடின உழைப்பு, செய்வதைத் திருந்தச் செய்வதற்கும் கற்றுக்கொடுத்தார். இவ்வாசிரியை பொதுவுடைமைக் கொள்கையில் ஈடுபாடு மிக்கவர்.

## மரண அனுபவம் தந்த இறையழைத்தல்:

ஜோர்ஜ்க்கு 21 வயது இருக்கும்போது, அவருக்கு கடுமையான நிமோனியா தாக்குதல் ஏற்பட்டிருப்பதை மருத்துவர்கள் கண்டறிந்தனர். அவர்தம் நுரையீரலின் வலது பிரிவில் மூன்று கட்டிகளைக் கண்டுபிடித்து, அதனை அறுவைச் சிகிச்சையின் மூலம் அகற்றினர். மருத்துவமனையில் ஒரு நடைப்பிணமாகக் கிடத்தப்பட்டு, மார்புப் பகுதியில் பல்வேறு மருந்துக் குழல்கள் பின்னியிருக்க, உடலுக்கு வலிமையூட்ட ஊட்டமருந்து ஒருபுறம் உடலுக்குள் சென்றுக் கொண்டிருக்க, வலியின் மிகுதியால் துடியாய்த் துடித்த அவர் தனக்கு நேர்ந்தததைக் குறித்து வியந்தார். ஏன் இந்த நிலைமை என்று நொந்துக்கொண்டார். அவரை மருத்துவமனையில் சந்திக்க வந்தவர்களும் அவருடைய வேதனையைக் கண்டு பரிதாபப்பட்டு, இவரிடம் “கவலைப்படாதப்பா! எல்லாம் சரியாய்ப் போயிடும்! இன்னும் கொஞ்ச நாளைக்குத்தான். நீ வீட்டில் இருந்தால் அவ்வளவு நன்றாயிருக்காது” என்று நேர்மறையாகச் சொல்லிச் சென்றனர். ஆனால், இந்த வலி மிகுந்த நாட்களைப் பொறுமையாகக் கடந்துச் செல்லவும், விசுவாசத்தை மிகுதியாக்கிக் கொள்ளவும் பெரிதும் துணை நின்றவர் அருட்சகோதரி டோலரஸ் ஆவார். இவர்தான் முதன் முதலாக புது நன்மை அல்லது முதல் நற்கருணைப் பெறும் விழா என்று அழைக்கப்படும் ஆண்டவரின் திருவுடலைப் பெறுவதற்கு இவருக்கு வகுப்பு எடுத்து தயாரித்து உதவியவர். மருத்துவமனையில் இவரைச் சந்தித்த அச்சகோதரி இவரிடம் அவர்தம் வேதனையைக் கண்டுக்கொள்ளாமல் நிராகரிக்கச் சொல்லவில்லை, மாறாக அதனை வாழ்த்த முயற்சிக்கும்படி அறிவுரைக் கூறினார். வலியால் அவர் துடித்தபோது “நீ கிறிஸ்துவைச் பின் செல்கிறாய்” என்றார். ஏற்கெனவே தாம் ஒரு குருவாக வேண்டும் என்ற விருப்பமும், இந்த மரண அனுபவமும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. எனவே, சேசுசபையினர் பொறுப்பிலிருந்த மறைமாவட்ட குருமடத்தில் குருமாணவராகச் சேர்ந்தார். முதலில் மறைமாவட்ட குருவாக வேண்டும் என்ற விருப்பமே அவரிடம் மேலோங்கியிருந்தது. பின்னர் டோமினிக்கன் எனப்படும் சுவாமிநாதர் சபையில் சேர விரும்பினார். சேசு சபையின் மறைபரப்பு ஆர்வம், ஒழுக்கம், குழும வாழ்வு ஆகியவற்றால் ஈர்க்கப்பட்ட ஜோர்ஜ், மார்ச் மாதம் 11ஆம் திகதி 1958ஆம் ஆண்டு வில்லா டிவோடோ என்னுமிடத்தில் குருமடத்தில் சேசு சபையின் நவத்துறவறத்தில் அடியெடுத்து வைத்தார். இவர் குருவாக தந்தை விருப்பம் தெரிவித்தார். தாயோ தொடர்ந்து வேலைக்குச் செல்லும்படியும், பல்கலைக்கழகப் படிப்பை முடிக்கும்படியும் அறிவுறுத்தினார்.



















## குருத்துவப் பயிற்சி:

பெயோனஸ் ஏரஸில் உள்ள மறைமாவட்ட குருமடமான வில்லா டிவோடோவில் தொடங்கினார். ஆனால், மானுடவியல் (அருளிரக்கச் செயல்கள்) குறித்த படிப்பை சிலி நாட்டில் முடித்துவிட்டு, 1963ஆம் ஆண்டு மீண்டும் அர்ஜென்டினா நாடு திரும்பி, சான் மிகுவேல் (*San Miguel*) என்னுமிடத்தில் கொலிஜியோ டி சான் ஜோஸ் (*Colegio de San Jose*)இல் மெய்யியலில் இளங்கலைப்பட்டம் பெற்றார்.

## குருவாக....

டிசம்பர் மாதம் 13, 1969 ஜோர்ஜ் பெர்கோக்லியோ சான் மிகுவேலில் உள்ள புனித ஜோசப் குருமடத்தில் இறையியல் படித்துக் கொண்டிருக்கும்போது, அன்றுதான் குருவாக திருப்பொழிவுச் செய்யப்பட்டார்.

அவர் தம் அன்புத்தாய் ரெஜினாவும் தம் மகனின் குருத்துவ விழாவில் கலந்து கொண்டு வாழ்த்தினார். அதன் பின்னர் ஸ்பெயின் நாட்டில் உள்ள அல்காலா தே ஹேராரஸ் என்னுமிடத்தில் தமது இறுதி வார்த்தைப்பாட்டைக் கொடுத்த பிறகு, ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி 1972ஆம் ஆண்டு, பெர்கோக்லியோ ஒரு முழுமையான இயேசுசபைக் குருவாக தமது நிரந்தர வார்த்தைப்பாட்டைக் கொடுத்தார்.

துறவற வாழ்வில் நிரந்தர வார்த்தைப்பாடு என்பது மிக முக்கியமான நிகழ்வு ஆகும். நீண்ட நெடிய பயிற்சிக்குப் பிறகு, கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் ஆகிய வார்த்தைப்பாடுகளோடு திருத்தந்தைக்கு கீழ்ப்படிதல் என்னும் கூடுதலான வார்த்தைப்பாட்டையும் சேசு சபை துறவிகள் மேற்கொள்வர். தாம் ஒரு சேசு சபைத் துறவி என்பதில் அவர் பெருமிதம் கொண்டார்.

## செப மனிதர்:

எல்லா துறவிகளுமே செபவாழ்வில் திளைத்திருக்க வேண்டும் என்பது திரு அவையின் அவா. குருவான பெர்கோக்லியோவும் நன்கு செபிக்கக்கூடிய செப மனிதராக வாழ்வில் மிளிர்ந்தார்.

அவர் குருத்துவப் பயிற்சி காலத்திலிருந்தே அதிகாலை துயிலெழும் பழக்கம் கொண்டவர். தினமும் அதிகாலை 4.30 மணிக்கோ அல்லது 5.00 மணிக்கோ படுக்கையை விட்டு எழுந்து விடுவார்.

நற்கருணை மீது ஆழ்ந்த பக்தியும் திருப்பலி மீது தீராத தாகமும் கொண்ட சிறந்த ஆன்மீகவாதியாக அவர் விளங்கினார். துறவற வாழ்வில் செபத்தின் இன்றியமையாமையை அவர் முழுமையாக உணர்ந்திருந்தார். இந்த ஆன்மீக அனுபவம் என்பது சில சமயங்களில் நீண்ட நேரம் நீடிப்பதும் உண்டு. ஜோர்ஜ் ஒரு சேசு சபைத் துறவியாக, சபையின் நிறுவனர் புனித லொயோலா இஞ்ஞாசியார் உருவாக்கிய ஆன்மீகப் பயிற்சிகளை அடிக்கடி மேற்கொள்வார். ஆன்மீகம் துறவறத்தை அழகுப்படுத்துகிறது என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார்.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# திருத்தந்தையின்...



6ஆம் பக்க தொடர்ச்சி...

## துணை ஆயராக நியமனம்:

கோர்டோபாவில் பணியாற்றிய காலக்கட்டம் என்பது பெர்கோக்லியோவுக்குத் நாடுக்கடத்தல் போன்று தெரிந்தது. அர்ஜென்டினாவின் சேசு சபையினர் ஒவ்வொருவராலும் அவர் புறக்கணிக்கப்பட்டார். எவருமே அவரைக்கண்டுக்கொள்ளவில்லை. திருத்தந்தையின் பிரதிநிதி உபால்டோ காலாபிரேசி, ஜோர்ஜ் பெர்கோக்லியோ மீது மிக உயரிய மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார். பெயோனஸ் ஏரஸின் துணை ஆயராக ஜோர்ஜ் பெர்கோக்லியோ தேர்ந்தெடுக்கப்பட்டார். 1992ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி, திருத்தந்தை இரண்டாம் யோவான் பெர்கோக்லியோவை பெயோனஸ் ஏரஸின் துணை ஆயராக கர்தினால் அன்டோனியோ குவார்சினோவின் கீழ், பணிபுரிய நியமித்தார். அவர் மே மாதம் 27ஆம் திகதி ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அவர் தம் ஆயர் திருநிலைப்பாட்டு விருதுவாக்காக மத்தேயுவின் அழைப்பின் அடிப்படையில் 'கருணையால் என்னைத் தேர்ந்தார்' என்பதை தேர்ந்துக்கொண்டு, அதற்கு இலச்சினையாக சேசு சபையின் IHS என்பதை இடம்பெறச் செய்தார். துணை ஆயராக அவர்தம் நியமனம் அவர்தம் வாழ்வின் மிக முக்கியமான திருப்புமுனையாகும்.

இப்படி எளிய ஆயராக, மக்களின் தோழராக, எந்தவித ஆடம்பரமுமின்றி மக்கள் பயணிக்கும் பேருந்திலும் இரயிலிலும் மக்களோடு மக்களாகப் பயணித்து, ஓர் எளிய இல்லத்தில் தனக்குத்தானே சமையல் செய்து, உண்டு, உடைகளைத் துவைத்து, மடித்து, நவத்துறவு வாழ்க்கை வாழ்ந்தார். இன்றைய ஆடம்பர பிரியர்களான ஆயர்களுக்கும் குருக்களுக்கும் துறவிகளுக்கும் சவால் விடுக்கிறவராக விளங்கினார்.

பெர்கோக்லியோ பெயோனஸ் ஏரஸ் உயர்மறைமாவட்ட துணை ஆயராக ஐந்து ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றினார். அச்சமயங்களில், இறை மக்களுக்கு பாவச்சங்கீர்த்தனம் கேட்டு ஒப்புரவு அருட்சாதனம் வழங்குவதைத் தொடர்ந்தார். இதற்கு முன்பு தலைமைப் பதவியில் இருந்தபோது, தன்னிடம் இருந்த தன்முனைப்பு மிக்க தலைமைத்துவத்திற்கு மிகவும் வருந்திய அவர், தற்சமயம், எல்லாருக்கும் செவிசாய்த்து, பார்ப்பதற்கு எளியவராகவும் பழகுவதற்கு இனியவராகவும் விளங்கினார். பேராயரும் கர்தினாலுமான குவார்சினோவுக்கு துணை ஆயராக இருந்தபோது, மறைமாவட்ட முதன்மை குருவாகவும் பணியாற்றினார். ஆகையால், அர்ஜென்டினிய திரு அவையில் நடைபெறும் ஒவ்வொன்றையும் பெரும்பாலும் அறிந்திருந்தார்.

## மக்கள் பேராயராக...

இதற்கிடையே கர்தினால் குவார்சினோ சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்தார். அச்சமயத்தில் தனக்கு ஒரு வாரிசு ஆயரை நியமிக்கும்படி உரோமையைக் கேட்க முடிவெடுத்தார். ஜோர்ஜ் பெர்கோக்லியோ தாம் பிறந்த தமது உயர்மறைமாவட்டமான பெயோனஸ் ஏரஸை மிகவும் நேசித்தார். ஆகையால், வாரிசு ஆயராக வேறு எவராவது நியமனம் ஆவதை மனதார விரும்பவில்லை. தன் விருப்பத்தை கர்தினாலிடம் வெளிப்படுத்தினார்.

1997ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி பாப்பிறை பிரதிநிதி காலாபிரேசி அவர்களைச் சந்தித்தார். அவரும் திருத்தந்தையின் விருப்பத்தைத் தெரிவித்தார்.

பெயோனஸ் ஏரஸின் வாரிசு ஆயரானார். வாரிசு ஆயராக அந்தப் பதவியில் நீண்ட காலம் அவர் பணியாற்றவில்லை. ஏனெனில், ஒன்பது மாதங்களுக்குப் பிறகு, உடல் நலக்குறைவால் கர்தினால் குவார்சினோ மறைந்தார். பெப்ரவரி 28ஆம் தேதி 1998ஆம் ஆண்டு, ஜோர்ஜ் மரியோ பேராயராகவும், அர்ஜென்டினாவின் முதன்மையாளராகவும் (Primate), அர்ஜென்டினாவின் கீழை வழிபாட்டு ரீதி இறை மக்களுக்கு நடுவராகவும் நியமிக்கப்பட்டார்.

## ஏழைமக்களின் பிரியமுள்ள ஆயர்:

அப்படி என்ன தலைகீழ் மாற்றம் என்றால், ஆயரான பெர்கோக்லியோ தம் மறைமாவட்டத்தின் கருணை இல்லங்கள் உட்பட ஒவ்வொரு பகுதியையும் ஊரையும் நேரில் சந்தித்தார். ஏழைகளின் ஏழைகளோடு பல மணிநேரம் செலவு செய்தார். எந்த அளவுக்கு எனில், அவர் "சேரிகளின் ஆயர்" என்றே அழைக்கப்படலானார். ஆயராகவும் பேராயராகவும் அவர் இருந்த பதினெட்டு ஆண்டுகளில், ஒரு குரு அவர் தம் பணியெல்லைக்குட்பட்ட மக்களில் பாதிக்கும் மேற்பட்டவர்களைப் பற்றி தனிப்பட்ட விதத்தில் ஒவ்வொருவராக விசாரித்தார் என்று ஆச்சரியத்தோடு குறிப்பிடுகிறார். பாதசாரிகளின் சுரங்கப்பாதையில் நடப்பார். பேருந்தில் பயணம் செய்வார், பல இடங்களில் சுற்றித்திரிந்து, அங்குள்ள மக்களைச் சந்திப்பார். அவர்தம் குழந்தைகளையும் இல்லங்களையும் ஆசீர்வதிப்பார். அவர்களோடு தேநீர் அருந்துவார்.

மேலும், அவர் மிகுந்த தாழ்ச்சி நிறைந்த மனிதராக, ஆயர் அலுவலகத்திற்கே உரிய ஆடம்பர அணியங்களை அவர் அறவே தவிர்த்தார். பேராயராக நியமிக்கப்பட்ட பின்பும் கூட, அவர் முதன்மை குருவாக இருந்தபோது பயன்படுத்திய கூடுதலான ஒரு படுக்கை அறை உள்ள இல்லத்தை விட்டு வெளியேறவில்லை. தொடர்ந்து அதனையே பயன்படுத்தினார். அந்தப் படுக்கையறையில் மரத்தாலான கட்டிலும், அதன் சுவரில் ஒரு பாடுபட்ட சுருபம் இருந்தது. இந்தப் பாடுபட்ட சுருபம் அவர்தம் தாத்தா பாட்டியான ஜுவான் - ரோஸா இவருக்குக் கொடுத்திருந்தனர். அந்த அறையில் மின்சாரத்தாலான வெப்பமாக்கும் கருவி ஒன்றிருந்தது. அக்கட்டடம் முழுவதும் ஒருங்கிணைந்து மையப்படுத்தப்பட்ட வெப்பமாக்கும் அமைப்பு நிலை இருந்தபோதிலும் அவரோ தன் அறையில் உள்ள அந்தக் கருவியை ஒருபோதும் பயன்படுத்தியதில்லை. அக்கட்டடம் முழுவதும் உள்ள பெரும்பாலான அறைகளில் யாரேனும் தங்கி, அனைத்து அறைகளும் பயன்படுத்தப்பட்டால் அப்போது மட்டுமே அவர் பயன்படுத்துவார். அந்த நடைக்கூடத்தில் தன் படுக்கைறையை ஒட்டினாற் போல அமைந்த அந்தச் சிறு அறையே அவரது செபக்கூடமாக இருந்தது. அதேபோன்றுதான் தேவையற்ற பழையப் பொருட்களை கிடத்தும் அறையும் அருகே இருந்தது.





















## எளிமையான வாழ்க்கை முறை:

அவரிடம் இருந்த ஒரே ஆடம்பரம் அதனையொட்டினாற்போல் அமைந்திருந்த அவரது நூலகம்தான். இங்குதான் அவரது நூல்களும், அன்றாடச்செய்தித்தாள்களும் இருக்கும். நன்கு அலங்கரிக்கப்பட்ட விசாலமான பேராயருடைய அலுவலகத்தை அவர் பயன்படுத்தவில்லை. மாறாக, அதே தளத்தில் தன் படுக்கை அறையைவிட சிறிதாக இருந்த ஒரு சிற்றறையைத்தான் தனது அலுவலகமாகப் பயன்படுத்தினார். இன்னும் சொல்லப்போனால், அந்தச் சிற்றறை அவருடைய செயலரின் அலுவலக அறையைவிட சின்னதாக இருந்தது. அவர்தம் செயலரிடம்கூட பேராயரின் சந்திப்புத் திட்டங்கள் இருக்காது. காரணம், அவரே தம் சந்திப்புத் திட்டங்களை, அன்றாட செயல்பாடுகளை தம் நோட்டுப் புத்தகத்தில் குறித்துக்கொள்வார்.

## கவனம் ஈர்த்த கர்தினாலாக...

அர்ஜென்டினியாவின் பேராயராக நியமிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி, 2001ஆம் ஆண்டு, நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் பெர்கோக்லியோவைக் கர்தினாலாக நியமனம் செய்தார். கர்தினாலுக்குரிய சிவப்புத் தொப்பிக் கொடுத்து, சான் ராபர்டோ பெல்லார்மினோ என்ற பட்டத்துடன் கர்தினால் குழாமில் இடமளித்தார். வத்திக்கானில் கர்தினாலுக்குரிய நியமன திருச்சடங்குகள் நடைபெறும்போது தங்கள் குடும்பத்தினரும் நண்பர்களும் உரோமைக்குப் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்ட பெர்கோக்லியோ, அவர்களிடம் அதற்கு மாறாக, அப்பயணத்திற்கும் செலவிடும் தொகையில் ஏழை எளிய மக்களுக்கு உதவும்படி வேண்டுகோள் விடுத்தார். ஏழைகள்மீதான அக்கறையை விடுதலை இறையியலாளர்களைப்போல வாய்க்கிழிய பேசாமல் செயல்பாட்டில் அவர் கொணர்ந்தார்.

கர்தினாலான ஜோர்ஜ் பெர்கோக்லியோ எல்லாரும் நன்கு அறிந்தவராக மட்டுமின்றி, எல்லார் மத்தியிலும் மதிப்பும் மரியாதையும் மிக்கவராகப் படிப்படியாக உலக அளவில் உயர்ந்தார். மேலும் தென் அமெரிக்கா முழுவதும் சக ஆயர்களின் நன்மதிப்பையும் பெற்று எல்லாராலும் நேசிக்கப்பட்டார். 2005ஆம் ஆண்டு அர்ஜென்டினிய ஆயர் பேரவையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், மூன்று ஆண்டுகள் கழித்து, தொடர்ந்து மீண்டும் அதன் தலைவராகவும், 2008ஆம் ஆண்டு மறுபடியும் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆக 2005ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை அர்ஜென்டினிய ஆயர்பேரவையின் தலைவராகப் பணியாற்றினார்.

2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் (ஜோன் பவுல்) இறந்தார். அதனைத் தொடர்ந்து, புதியத் தந்தையைத் தேர்ந்தெடுப்பதற்காக வாக்களிக்கும் தகுதியுடைய 115 கர்தினால்களும் வத்திக்கான் வந்தனர். கர்தினால் ஜோர்ஜ் பெர்கோக்லியோவும் அங்கு வந்தார்.

கான்கிளேவில் நான்குச் சுற்று தேர்வுக்குப் பிறகு, கர்தினால் ராட்சிங்கர் ஏப்ரல் 19ஆம் திகதி மதியம் புதிய திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பதினாறாம் பெனடிக்ட் என்னும் பெயரைத் தேர்ந்தார்.

அர்ஜென்டினா திரும்பிய கர்தினால் ஜோர்ஜ் பெர்கோக்லியோ மிகவும் சிக்கலான எட்டு ஆண்டுகளை எதிர்கொண்டார். பாலியல் குற்றச்சாட்டிற்கு குருக்கள் உள்ளானதால், பெரும்பாலான மறைமாவட்டங்கள் தங்களுடைய உடைமைகளை விற்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு பெருந்தொகையை நஷ்ட ஈடாகத் தந்தனர்: வத்திக்கானில் செயல்படும் வங்கியில் ஊழல், மறைந்த திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரைப் போல உலகின் கவனத்தை ஈர்க்க முடியாமல் திருத்தந்தை பெனடிக்டின் ஒருவித தடுமாற்றம், ஆடம்பரமான வாழ்க்கைமுறை என சோதனையான காலக்கட்டம்.

2013ஆம் ஆண்டு பிப்ரவரி 11ஆம் திகதி, காலை 11 மணிக்கு வத்திக்கானில் உள்ள கான்சிஸ்டரி ஹாலில் சாட்சிய வாழ்வு வாழ்ந்தவர்களுக்கு முத்திப்பேறு பட்ட நிகழ்வு திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் தலைமையில் நடைபெற்றது.

அந்தத் திருச்சடங்கு முடிந்த பிறகு, உலகமே எதிர்பார்க்காத அறிவிப்பு ஒன்றை பெனடிக்ட் வெளியிட்டார். அது கத்தோலிக்கத் திருச்சபைக்கு அதிர்ச்சியான செய்தி. ஆம்! தம் வயது மற்றும் உடல் நிலையை காரணங்காட்டி, திருத்தந்தைப் பொறுப்பிலிருந்து விலகுவதாக அவர் லத்தீன் மொழியில் அறிவித்தார். அவர் வாசித்தளித்த அறிக்கைத்தாளில் நேரம் பெப்ரவரி 10, 2013 என்று முந்தைய நாள் குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி, இரவு மணி முதல் புனித பேதுருவின் திருப்பீடம் காலியாகும். ஆகையால், கான்கிளேவ் எனப்படும் கர்தினால் அவைக்குரிய கர்தினால்கள் அனைவரும் புதிய திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்க வத்திக்கானுக்கு வரும்படி அழைப்பாணை அனுப்பப்பட்டது. நமக்கு ஒரு மக்கள் போப் கிடைத்துள்ளார்.

உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவ மக்கள் போப் உடல்நலம் பெற்று மீண்டு வர பிரார்த்தனை செய்துவந்த நிலையில் அவரது மறைவுச் செய்தி வந்துள்ளது.

(நன்றி: இணையம்)

இத்தாலிய சீரி ஏ தொடர்:

# பொலொக்னாவிடம் தோற்றது நடப்புச் சம்பியன்கள்



இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், பொலொக்னாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான இன்டர் மிலன் தோற்றது.

பொலொக்னா சார்பாகப் பெறப்பட்ட கோலை றிக்கார்டோ ஓர்சோலினி பெற்றிருந்தார்.

இதேவேளை, தமது மைதானத்தில் திங்கட்கிழமை(21) அதிகாலை நடைபெற்ற அத்லாண்டாவுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் ஏ.சி மிலன் தோற்றது. அத்லாண்டா சார்பாகப் பெறப்பட்ட கோலை எடெர்சன் பெற்றிருந்தார்.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் இன்டரும், நாப்போலியும் தலா 71 புள்ளிகளைப் பெற்றுள்ளபோதும் அவற்றுக்கிடையேயான போட்டி முடிவுகளின்படி முறையே முதலாம், இரண்டாமிடங்களில் காணப்படுகின்றன.

64 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தில் அத்லாண்டாவும், 60 புள்ளிகளுடன் நான்காம் இடத்தில் பொலொக்னாவும் காணப்படுகின்றன.



ஐ.பி.எல்:

# சென்னையை வீழ்த்தியது மும்பை

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), மும்பையில் ஞாயிற்றுக்கிழமை (20) நடைபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸுடனான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மும்பை


சென்னை: 176/5 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: இரவீந்திர ஜடேஜா 53 (35), ஷிவம் டுபே 50 (32), ஆயுஷ் மஹர்ட்ரே 32 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜஸ்பிரிட் பும்ரா 2/25 [4], மிற்செல் சான்ட்னெர் 1/14 [3], தீபக் சஹர் 1/32 [4], ஹர்திக் பாண்டியா 0/13 [2], வில் ஜக்ஸ் 0/4 [1])

மும்பை: 177/1 (15.4 ஓவ.) (துடுப்பாட்டம்: றோஹித் ஷர்மா ஆ.இ 76 (45), சூரியகுமார் யாதவ் ஆ.இ 68 (30), றயான் றிக்கெல்டன் 24 (19) ஓட்டங்கள். பந்துவீச்சு: இரவிச்சந்திரன் அஷ்வின் 0/25 [4], இரவீந்திர ஜடேஜா 1/28 [3])

போட்டியின் நாயகன்: றோஹித் ஷர்மா.

இந்நிலையில், முல்லான்பூரில் நடைபெற்ற மற்றைய போட்டியில் பஞ்சாப் கிங்ஸை றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு வென்றது.

இதேவேளை, லக்னோவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸை லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



ஜேர்மனிய தொடர்:

## சமநிலையில் லெவர்குசன் - சென்.பௌளி போட்டி

ஜேர்மனிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பெண்டெலிஸ்கா தொடரில், சென். பௌலியின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (20) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பயெர் லெவர்குசன் சமப்படுத்தியது.

லெவர்குசன் சார்பாகப் பெறப்பட்ட கோலை பற்றிக் ஸ்சிச் பெற்றதோடு, பௌலி சார்பாகப் பெறப்பட்ட கோலை கார்லோ பூகாலிபாவும் பெற்றிருந்தனர்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற பொரூசியா மொச்சென்கிளெட்பாவுடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் பொரூசியா டொட்டமுண்ட் வென்றது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## வொல்வ்ஃஸிடம் தோற்றது யுனைட்டெட்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை(20) நடைபெற்ற வொல்வர்ஹம்ப்டன் வொன்டரேர்ஸுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றது.



வொல்வ்ஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை பப்லோ சரபியா பெற்றிருந்தார்.

இதேவேளை, லெய்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றது. லிவர்பூல் சார்பாகப் பெறப்பட்ட கோலை ட்ரென்ட் அலெக்ஸான்டர்-அர்னோல்ட் பெற்றிருந்தார்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 79 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் காணப்படுகின்றது. 66 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 59 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நியூகாசில் யுனைட்டெட்டும், 58 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியும் காணப்படுகின்றன.

சவூதி அரேபிய குரான் பிறி:

## வென்று முன்னிலை பெற்றார் பியாஸ்திரி

சவூதி அரேபிய குரான் பிறீயை வென்ற மக்லரென் அணியின் ஒஸ்கார் பியாஸ்திரி, இவ்வாண்டுக்கான போர்மியுலா வண் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் முதலிடம் பெற்றார்.

ஞாயிற்றுக்கிழமை (20) அன்று நடைபெற்ற பந்தயத்தை இரண்டாமிடத்திலிருந்து ஆரம்பித்து அவுஸ்திரேலியாவின் பியாஸ்திரி முதலாமிடத்தைப் பெறந்தோடு, பந்தயத்தை முதலாமிடத்திலிருந்து ஆரம்பித்த நடப்புச் சம்பியனான மக்ஸ் வெர்ஸ்டப்பன் இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, பந்தயத்தை நான்காமிடத்திலிருந்து ஆரம்பித்த பெராரி அணியின் சார்ள்ஸ் லெக்கலெர்க் மூன்றாமிடத்தைப் பெற்றார்.



ஆபிரிக்கா

சிறைக் கலவரம்:

# 130 கைதிகள் தப்பியோட்டம்

மத்திய ஆபிரிக்க நாடான சாட்டில் உள்ள மோங்கோ நகரில்,சிறை நிர்வாகத்தைக் கண்டித்து கைதிகள் நடத்திய போராட்டத்தை சாதகமாக்கிக் கொண்டு, 130க்கும் மேற்பட்ட கைதிகள் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர்.

மோங்கோ என்ற நகரத்தில் அமைந்திருக்கும் சிறைச்சாலையில் சுமார் 500 கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே அங்குள்ள கைதிகள் தங்களுக்கு போதிய உணவு வழங்கப்படுவதில்லை என குற்றம்சாட்டி வந்துள்ளனர்.



ஆனால், அதிகாரிகள் அதனை கண்டுகொள்ளவில்லை என கூறப்படுகிறது.

இந்த நிலையில், குவேரா மாகாண ஆளுநர் மோங்கோ சிறைச்சாலையைப் பார்வையிடச் சென்றிருந்தார்.

அப்போது சிறை நிர்வாகத்தைக் கண்டித்து கைதிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அந்த சமயத்தில் சில கைதிகள் காவலர்களின் அறைக்குள் நுழைந்து, அங்கிருந்த துப்பாக்கியை எடுத்துச் சுட ஆரம்பித்துள்ளனர். இதனால் அங்கு கலவரம் வெடித்துள்ளது.

இந்த கலவரத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். பலருக்கு படுகாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த நெருக்கடியான சூழலைப் பயன்படுத்தி 130க்கும் மேற்பட்ட கைதிகள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். இதனால் அங்கு பதற்றமான சூழல் நிலவுகிறது.

அமெரிக்கா

## விமான விபத்தில் நால்வர் பலி



அமெரிக்காவில் இடம்பெற்ற விமான விபத்தில், நால்வர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவின் விஸ்கான்சின் மாகாணம் மெனோமொனி நகரில் இருந்து இல்லியான்ஸ் மாகாணத்திற்கு சிசா 180 என்ற சிறியரக விமானம், ஞாயிற்றுக்கிழமை (20) காலை புறப்பட்டது. அந்த விமானத்தில் 2 பெண்கள் உட்பட 4 பேர் பயணித்தனர்.

இல்லியான்ஸ் மாகாணத்தின் டிரில்லா நகரில் விமானம் தரையிறங்க தாழ்வாக பறந்தது. அப்போது, எதிர்பாராத விதமாக வீதியோரம் அமைக்கப்பட்டிருந்த மின் கம்பி மீது விமானம் உரசியது.

இதையடுத்து விமானியின் கட்டுப்பாட்டை இழந்த விமானம் வீதியோர வயல்பகுதியில் மோதி வெடித்து சிதறியது.

இந்த கோர விபத்தில் விமானத்தில் பயணித்த 4 பேரும் உயிரிழந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அமெரிக்கா

ட்ரம்புக்கு எதிராக

## வலுக்கும் போராட்டம்




அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்ற பின்னர் பல்வேறு அதிரடி மாற்றங்களை அறிவித்து வருகிறார்.

அதில் வெளிநாட்டவர் வலுக்கட்டாயமாக வெளியேற்றம், அரசு ஊழியர்கள் பணிநீக்கம், கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவி நிறுத்தம் ஆகியவை மக்களிடம் கோபத்தை ஏற்படுத்தின.

இவரது இந்த நடவடிக்கை ஜனநாயகத்துக்கு எதிராக இருப்பதாகக் கூறி நாடு முழுவதும் மக்கள் போராட்டத்தில் குதித்தனர்.

இந்நிலையில், நியூயார்க், வொஷிங்டன் ஆகிய நகரங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் பேரணியாகச் சென்றனர்.

அப்போது ட்ரம்புக்கு எதிரான பதாகைகளை ஏந்திக் கொண்டு சென்ற அவர்கள் வெள்ளை மாளிகையையும் முற்றுகையிட முயன்றனர். இதனால் அங்கு பதற்றமான சூழல் நிலவியது.

இதையடுத்து, அப்பகுதியில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

கோவா

## தேங்காய் ரூ.10 இலட்சம்

கோவா மாநிலத்தில் கோயில் தேங்காய் ஒன்றை ரூ.10 இலட்சத்துக்கு ஏலத்தில் பக்தர் ஒருவர் வாங்கி உள்ளார்.

கோவா மாநிலம், வடக்கு கோவா மாவட்டம், பெர்னெம் நகருக்கு அருகே உள்ள கோர்காவ் கிராமத்தில் ஸ்ரீ தேவ் ரகுகோன்ஷெட் கோயில் உள்ளது. இந்த கோயிலில் கடந்த வெள்ளிக்கிழமை (19) வருடாந்திர திருவிழா நடைபெற்றது.

ஐந்து நாட்கள் நடைபெற்ற இவ்விழாவில், பெர்னெம் நகரம் மட்டுமல்லாது அதைச் சுற்றியுள்ள கிராம மக்கள் பங்கேற்று சுவாமியை தரிசித்தனர். இவ்விழாவின் இறுதியாக, சுவாமிக்கு படைத்த தேங்காய் ஏலத்தில் விடப்பட்டது. அப்போது, ஒரு பக்தர் அந்த புனித தேங்காயை ரூ.10 இலட்சத்துக்கு வாங்கி உள்ளார். இதை அவர் தனது வீட்டில் வைத்து வழிபடுவார் என கூறப்படுகிறது.



இந்தக் கோயிலில் கடந்த ஆண்டு நடைபெற்ற திருவிழாவின்போது, புனித தேங்காய் ரூ.11 இலட்சத்துக்கு ஏலம் போனது.

திருவிழாவின்போது, வாழைப்பழம், தற்பூசணி, அன்னாசி உள்ளிட்ட பழங்கள் சுவாமிக்கு படைக்கப்படுவது வழக்கம். விழாவின் முடிவில் இவை அனைத்தும் கோயில் நிர்வாகக் குழுவினரால் ஏலத்தில் விடப்படும். இதன்மூலம் திரட்டப்படும் நிதி, கோயில் நிர்வாகப் பணிகளுக்கும் சமுதாய சேவைகளுக்கும் பயன்படுத்தப்படும் என கோயில் நிர்வாகக் குழு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காஷ்மீர்

காஷ்மீரில்

## வெள்ளம், மண்சரிவு; ஐவர் பலி

காஷ்மீரின் ரம்பன் மாவட்டத்தில், சனிக்கிழமை(19) இரவு பெய்த கனமழை காரணமாக, அம்மாவட்டத்தில் உள்ள ஜம்பா ஆற்றில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.



கனமழை காரணமாக மண்சரிவும் ஏற்பட்டது. இதில், 10க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. மேலும், வீதிகள் முற்றிலும் சேதமடைந்துள்ளன.

வெள்ளம், மண்சரிவில் 100க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளன. ஆனாலும், இந்த சம்பவத்தில் ஏற்கனவே 3 பேர் உயிரிழந்த நிலையில் மேலும் 2 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் இந்த சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 5ஆக அதிகரித்துள்ளது.

கனமழை, வெள்ளத்தால் ரைசி மாவட்டமும் பாதிக்கப்பட்டுள்ளது.

புதுடெல்லி

அமெரிக்க துணை ஜனாதிபதி

## இந்தியாவுக்கு விஜயம்



நான்கு நாட்கள் பயணமாக அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் குடும்பத்துடன் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அவரது மனைவியும் இந்திய வம்சாவளி பெண்ணுமான உஷா, குழந்தைகள் எவான், விவேக், மிராபெல் ஆகியோரும் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

டெல்லி விமான நிலையம் வந்த ஜே.டி.வான்ஸ் மற்றும் குடும்பத்தினரை விமான நிலையம் சென்று மத்திய மந்திரி அஸ்வினி வைஷ்னவ் வரவேற்றுள்ளார்.

இதையடுத்து, டெல்லியில் உள்ள சுவாமி நாராயணன் அக்ஷர்தாம் கோவிலுக்கு ஜே.டி.வான்ஸ் குடும்பத்துடன் சென்று சாமி தரிசனம் செய்கிறார். அதன்பின்னர்,

ஜே.டி. வான்ஸ், பிரதமர் மோடியை அவரது இல்லத்தில் சந்திக்கவுள்ளார். இந்த சந்திப்பின்போது இருநாட்டு உறவு வர்த்தகம், வரிவிதிப்பு உள்ளிட்ட முக்கிய விவகாரங்கள் ஆலோசிக்கப்படஉள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 22, ஏப்ரல் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.